# விவேகவாணி

ஜனவரி 2012 - கர மார்கழி - தை கலி 5113 ரூ.7/-




## சுவாமி விவேகானந்தர் பிறந்ததினம்

# விவேகவாணி

**விவேகானந்த கேந்திர மாத இதழ்**

**விவேகானந்தபுரம், கன்னியாகுமரி – 629 702**


## வணக்கம்! வாருங்கள்!!


**வெளியீட்டு அலுவலகம்**

**விவேகானந்த கேந்திரம், 5 – சிங்கராச்சாரி தெரு,**

**திருவல்லிக்கேணி, சென்னை – 600 005**


அன்புள்ள வாசக நேயர்களுக்கு,
நமஸ்காரம்.

**விவேகவாணியின் ஜனவரி – 2012** இதழ் வாசகர்களுக்கு மனம் நிறைந்த **பொங்கல்** வாழ்த்துக்களைத் தாங்கி வருகிறது. **ஜனவரி – 12 சுவாமிஜியின் பிறந்த நாளைக்** குறிக்கும் வண்ணம் அவருடைய திருவுருவப் படத்தை இவ்விதழ் அட்டையில் தாங்கி வருகிறது. அவரைப் பற்றி **சரத் சந்திர சக்கரவர்த்தி** எழுதிய துதி **மாதம் ஒரு மந்திரமாக** வெளியாகிறது. சுவாமிஜி காட்டிய வழியில் நின்று தேசப்பணி, தெய்வப்பணி, மனிதநேயப் பணி ஆற்றுவோமாக!

சுவாமிஜியின் தீர்க்க தரிசனத்தைக் குறிக்கும் வண்ணம் புகழ்பெற்ற விஞ்ஞானி எழுதிய கட்டுரையும் இவ்விதழில் வெளியாகிறது.

பிரணவம் எனும் ஓம்காரம் தொடர் 251-வது தவணையை எட்டியுள்ளது. ஓம்காரம் என்றாலே மாண்டூக்கிய உபநிஷதம், அதற்கு ஸ்ரீகௌடபாதர் எழுதிய காரிகை இவற்றுக்கு ஆதிசங்கரரர் எழுதிய உரை இவையே முதலில் நம் கண் முன் வருவன. இவ்வுரையை ஸ்ரீமத் சுவாமி கம்பீரானந்தாஜியின் ஆங்கில மொழி பெயர்ப்பு வழியே தமிழாக்கம் செய்து **விவேகவாணியில்** வெளியிடுகிறோம். ஓம்காரத்தின் மகிமையைப் போற்றிய சுவாமி விவேகானந்தரின் உள்ளத்திற்கு இப்பணி உகந்தது ஆகும். பிற அம்சங்கள் இடவசதிக்கேற்ப வெளியாகின்றன.

**இப்படிக்கு,**
**இறைவன் பணியில்,**
**விவேகவாணி**

**ஜனவரி – 2012**


**தொலைபேசி: (044) – 28440042/28442843**
**ஈமெயில்: vkpt@vkendra.org**

**தவம் 27** | **ஜனவரி – 2012** | **சேவை – 9**

**தனிப்பிரதி ரூ. 7/-, ஆண்டுச்சந்தா ரூ. 75/-, இரண்டாண்டுச் சந்தா ரூ. 140/-, மூன்றாண்டுச் சந்தா ரூ. 200/-, ஆயுட்சந்தா (10 ஆண்டுகள்) ரூ. 700/-, வெளிநாட்டு ஆண்டுச் சந்தா 20 டாலர்கள்.**

# பரிசவேதி விவேகானந்தர்

மூர்த்த மஹேஸ்வர முஜ்ஜ்வல
பாஸ்கரமிஷ்ட மமர நரவந்த்யம்/

வந்தே வேத தனு முஞ்ஜித கர்ஹித
காஞ்ச்சன காமினி பந்தம்//

கோடிபானுகர தீப்த ஸிம்ஹ மஹோ
கடிதடி கௌபீன வந்த்தம்/

அபீர பீஹுங்கார நாதித திங்முக்க
ப்ரசண்ட தாண்டவ ந்ருத்யம்//

புக்திமுக்தி க்ருபா கடாக்ஷ ப்ரேக்ஷண
மகதல விதல ந த க்ஷம்/

பாலசந்த்ர தர மிந்து வந்த்ய மிஹ
நௌமி குரு விவேகானந்தம்//

சுவாமி சதானந்தா



-- சரத் சந்த்ர சக்கரவர்த்தி

நான் விவேகானந்தரை வணங்குகிறேன். அவரே என் ஆன்மீக வழிகாட்டி ஆவார். அவரே நான் வழிபடுவதற்குரியவர். அவர் சிவனின் திருவடிவம். சூரியனைப் போல் ஒளி வீசுபவர். மானுடர்களும், தேவர்களும் அவரை வணங்குவர். அவரே வேதங்களின் திடவடிவம். அவர் காமத்தையும், பணத்தாசையையும் முற்றிலுமாக வென்றவர். அவை கண்டிக்கத் தகுந்தவை தானே! அவர் மனிதர்களுள் ஒரு சிங்கம் போன்றவர். கோடி சூரியப் பிரகாசம் கொண்டவர். துறவிகள் அணியும் சிற்றாடையே அணிந்தவர். அவர் சிவனைப் போல் ஆடும் தாண்டவத்தால் திசைகள் அதிர்கின்றன. அவர் ''அஞ்சாதே அஞ்சாதே'' என்று கர்ஜிக்கிறார். அவர் கடைக்கண்ணின் பார்வை ஒன்றே போகத்தையும், மோக்ஷத்தையும் அளிக்கவல்லது. தீமையின் கூட்டங்களை அவர் எளிதாக நசுக்கி விடுகிறார். அவர் பாலசந்திரனைத் தலையில் தாங்கும் சிவனைப் போன்றவரே. அவரை 'இந்து'வாகிய நான் வழிபடுகிறேன்.

(இந்து கவிஞரின் புனைப்பெயர்)

# வேதத்தின் உட்பொருள்


# பிரணவம் எனும் ஓம்காரம் [251]

## மாண்டுக்ய உபநிஷதம்

## *கௌடபாத காரிகையின் சங்கர பாஷ்யம்*


**அத்தியாயம் – 1 :** ஆகமப்ரகரணம் (வேத மூலபாடத்தின் உரை)

**பாஷ்யகாரரின் பிரார்த்தனை :** 1) நான் பிரம்மத்தை வணங்குகின்றேன். பிரம்மம், (விழிப்பு நிலையில்) தூலப் பொருள்களை அனுபவிக்கின்றது; இதற்கென அது, மானுட லட்சியங்கள் யாவற்றையும் ஊடுருவுகின்றது. தன் மாறாத பிரஜ்ஞையின் கிரணங்களை மானுட லட்சியங்கள் அனைத்தின் ஊடும் கரைந்து பரவச் செய்கின்றது. இந்தப் பிரஜ்ஞை அசைவன, அசையாதிருப்பன அனைத்தையும் உள்ளடக்கியது. பிரம்மம் (கனவு எனும் நிலையில்) எல்லாவகையான பொருள்களையும் அருந்துகின்றது. (உணரப்படாத தன்னில் எல்லாவற்றையும் இணைக்கின்றது) இப்பொருள்கள் ஆசையால் உண்டாக்கப்படுகின்றன. (செயலாலும், அறியாமையாலும் கூட உண்டாக்கப்படுகின்றன) அவை அறிவால் ஒளியூட்டப்படுவன. பிரம்மம் உறங்குகையில் ஆனந்தத்தை அனுபவிக்கின்றது. மாயையின் மூலம் நாம் அனுபவிக்கும்படி செய்கின்றது. மாயையின் நோக்கில் அது நான்காவதாக எண்ணப்படுகின்றது. பிரம்மமே பரம்; அமுதம்; பிறவாதது.



2) அந்த நான்காவதான ஒன்று நம்மைக் காக்குமாக. அது தன்னை இப்பிரபஞ்சத்துடன் ஐக்கியப்படுத்திக் கொண்டபிறகு (விழிப்பு நிலையில்) தூலப்பொருள்களை அனுபவிக்கின்றது. அவை நல்லவை (தீயவை)யால் உண்டாக்கப்பட்டவை. மேலும் (கனவு நிலையில்) தன் ஒளி மூலமாகவே, அனுபவிக்கத்தக்க பொருள்களை நுகர்கின்றது. இவை அதன் புத்தியினாலேயே உண்டாக்கப்பட்டவை. கனவற்ற உறக்கத்தில் (சுஷுப்தியில்) அது இவை அனைத்தையும் தனக்குள் உடனடியாக இழுத்துக் கொள்கின்றது. இறுதியில் அது குணங்கள், வர்ணனைகள் அனைத்தில் இருந்தும் விடுபடுகின்றது. ஒவ்வொரு தனிச்சிறப்பையும், வேறுபாட்டையும் அது களைந்து விடுகின்றது.

**முன்னுரை :** ‘‘ஓம் எனும் எழுத்து தான் இவை அனைத்துமாக இருக்கின்றது. அதனைப் பற்றிய தெளிவான விளக்கம் தொடர்கின்றது (மாண்டூ I.i.1) வேதாந்தக் கருத்துக்களின் சாரத்தை சுருக்கிக் கூறும் காரிகையின் இந்த நான்கு அத்தியாயங்கள் ‘‘ஓம் எனும் எழுத்து தான் இவை யாவும்’’ என்ற மூலபாடத்துடன் துவங்குகின்றன. அதன்படி, சம்பந்தம் (புத்தகத்திற்கும், விஷயத்திற்கும் உள்ள தொடர்பு) விஷயம் (நூற்பொருள்) பிரம்ம, ஆத்ம ஐக்கியம், நூற்பயன் (மோட்சம்) ஆகியவை உபநிஷதத்திலும், காரிகையிலும் ஒன்றே. ஆயினும் அதனை ஒரு ஆராய்ச்சி நூலில் விவரிக்க விரும்புபவர், அவற்றைச் சுருக்கமாகச் சொல்லித்தான் ஆகவேண்டும். இது தொடர்பாக ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். ஒரு சாத்திர நூல் (அது வேதாந்தமாயினும், வேதாந்தத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல் ஆயினும்) லட்சியத்துக்கு அநுகூலமான ஆன்மீகக் கட்டுப்பாடுகளை வெளிக் கூறுகின்றது; அதனால் அதில் ஒரு விஷயம் (உட்பொருள்) வந்து விடுகின்றது. இவ்வுண்மையினால் அந்நூல் மறைமுகமாக சில விஷயங்களைப் பெற்று விடுகின்றது. 1) தெளிவான (நூல் – விஷய) உறவு 2) விஷயம் (உட்பொருள், 3) பயன் (மோட்சம்). கூறவந்த பயன் தான் என்ன? அதனை விளக்குவோம். ஒரு மனிதனின் சாதாரண உடல்நிலை, நோயினால் பாதிக்கப்பட்டால், நோய் தீர்ப்பதில் தான் லட்சியம் இருக்கின்றது. அதுபோல், ஆத்மாவின் சாதாரண நிலை துன்பப் பிணைப்பினால் தான் இருக்கின்றது. அதுபோல், ஆத்மாவின் சாதாரண நிலை துன்பப் பிணைப்பினால் தாக்குண்டு, இருக்கும்போது இருமை உடைய, (புற வய) உலகம் தீர்ந்து (த்வைதப் பிரபஞ்சம்) போய் விடுவதால், இல்லாமல் போய்விடுவதால் (ஆத்மா) திரும்பப் பெறப்படுகின்றது. அத்வைத உணர்வே நூற்பயனாம். துவைதப் பிரபஞ்சம் (இருமைப் படைப்பு) அவத்தை எனும் அஞ்ஞானத்தால் உண்டாக்கப்படுகின்றது. அதனை ஞானத்தினால் அழிக்க முடியும். பிரம்ம ஞானத்தை அருளவே இந்நூல் துவங்கப்படுகிறது. இந்த உண்மை வேத மூலநூல்களால் நிறுவப்படுகின்றது. துவைதம் இருக்கும் போது, (தோன்றும்போது) ஒருவன் எதையோ முகர்கின்றான். எதையோ காண்கிறான். (பிருஹ II.iv.14)



இது இவ்வாறிருக்க;

முதல் அத்தியாயம், ‘ஓம்’ என்பதன் பொருளைத் தீர்மானிக்கும் தீவிர எண்ணம் கொண்டது. அது பாரம்பரிய வேத ஞானத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆத்மாவின் சத்தியத்தை நிரூபிக்க உதவுவது. இரண்டாவது

அத்தியாயம் தர்க்கப்பூர்வமாக, இருமைப் பிரபஞ்சத்தின் உண்மைற்ற தன்மையை நிரூபிக்கும் தன்மையது. இருமைப் பிரபஞ்சம் ஒழிந்து (தீர்ந்து) போன உடன் ''அத்வைதம்'' கிட்டுகின்றது. பாம்பு எனும் விகல்பம் (பொய்த் தோற்றம்) (கயிற்றின் மீது கற்பிக்கப்பட்டது) நீக்கப்பட்டதும் கயிற்றின் உண்மைத்தன்மை அடையப்படுகிறது. மூன்றாவது அத்யாயம் இருப்பதை அத்வைத சத்தியத்தை யுக்தியினால் (தர்க்கத்தினால்) நிறுவவே. இல்லாவிட்டால் அதுவும் இத்தகைய வாதத்தினால் இல்லை என்று கூறப்பட்டுவிடுமே! நான்காவது அத்யாயம், வேதத்துக்குப் புறம்பான தரிசனங்களை மறுக்க முற்படுகிறது. இப்பணிக்கு அவற்றின் வாதங்களையே பயன்படுத்துகிறது. வேதத்துக்குப் புறம்பானவை, அத்வைதத்திற்கு எதிரானவை. (அத்வைதத்தால் நிறுவப்பட்ட இருமை இன்மை). அவைதிக தரிசனங்கள், இந்த அசத்திய துவைதத்தில் சிக்கி இருப்பன. இதற்குச் சான்று அவை ஒன்றை ஒன்று எதிர்ப்பதே!


ஓம்காரத்தின் பொருளைத் தீர்மானிப்பது, ஆத்ம சத்யத்தை உணர உதவுவது எப்படி? இதன் பதிலை கட I.ii.15 முதலிய வேத மூலமந்திரங்கள் கூறுகின்றன. எல்லா வேதங்களும் ஒரே குரலில் எதனை லட்சியமாகக் கூறுகின்றனவோ, எதனைத் தவங்கள் அனைத்தும் கூறுகின்றனவோ, எதனை விரும்பி மக்கள் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்கின்றனரோ அதுவே இது (ஓம்). இந்தத் துணையே மிகச்சிறந்தது (க.உ). ஓ ஸத்ய காமா இந்த ஓம்காரத்தின் உண்மையில் பிரம்மம் (பரப்பிரம்மமும், அபரப்பிரம்மமும்) (பிரச்ன) ஆத்மாவின் மீது ஓம் என்று தியானம் செய்க (மைத்ரீ. ஓம் என்பதே பிரம்மன் (தை.உ) உண்மையில் ஓம் தான் இவை அனைத்தும் (சாந்). இந்த வேத நூல்களில் இருந்து தெரிய வருவதென்ன? அத்வைத (இரண்டற்ற) ஆத்மாவே பரம சத்தியம் ஆகும். இருப்பினும் அது, பிராணன் முதலிய பொய்த்தோற்றங்களின் அடிப்படையாக இருப்பது ஆகும். பாம்பு எனும் பொய்த்தோற்றத்திற்கு, கயிறு அடிப்படையாக இருப்பதுபோல் ஆகும். அதுபோலவே ஓம் என்பது பேச்சின் (வாக்கின்) மாறுபாடுகள் அனைத்தின் அடிப்படை ஆகும். ஆத்மாவின் பொய்த்தோற்றங்களான பிராணன் முதலியன, பேச்சின் (வாக்கின்) உள்ளுறைப் பொருள் ஆகும். ஓம் என்பது அடிப்படையில் ஆத்மாவே ஆகும். ஏனெனில் ஓம் ஆத்மாவைத்தான் குறிக்கின்றது. ஆத்மாவின் பொய்த்தோற்றங்கள் அனைத்தும், பிராண சக்தி போன்ற அனைத்தும், ஓம் என்பதன் மாறுபாடுகளினால் குறிப்பிடப்படுகின்றன. அவை தம் பெயர்களில் இருந்து விலகித் தனித்து இருப்பவை அல்ல. இவ்வாறு வேத மூல நூல்கள் கூறுகின்றன. மாற்றங்கள் யாவும் பெயரளவுக்குத்தான் இருக்கின்றன. மாற்றத்தின் துணையாக ஆதரவாக, பேச்சு (வாக்கு) இருக்கின்றது (சா.உ). ''பிரம்மத்தின் உலகத் தோற்றங்கள் அனைத்தும் பேச்சு எனும் நூலாலும், பெயர்கள் என்ற இழைகளாலும் கோர்க்கப்பட்டு இருக்கின்றன.'' ஆகவே ''ஓம் இதி ஏதத் அக்ஷரம் இதம் ஸர்வம்'' ஓம் என்ற எழுத்துத்தான் இவை அனைத்தும் என்கின்றது உபநிஷதம்.

## உபநிஷதம்:

**ஓமித்யேததக்ஷரமிதம் ஸர்வம் தஸ்யோபவ்யாக்யானம் பூதம் பவத் பவிஷ்யதிதி ஸர்வமோங்கார ஏவ! யச்சான்யத் த்ரிகாலாதீதம் ததப்யோங்கார ஏவ!**

1) ஓம் எனும் எழுத்துத்தான் இவை அனைத்தும். இதனைப் பற்றிய ஒரு தெளிவான உரை இங்கே தொடங்குகின்றது. இருந்தது, இருப்பது, எதிர்காலம் அனைத்தும் உண்மையில் ஓம் தான். முக்காலத்துக்கும் அப்பாற்பட்டதாக எது இருக்கின்றதோ அதுவும் உண்மையில் ஓம் தான்.

பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ள இப்பொருள்கள் யாவுமே, பெயர்களில் இருந்து வேறுபட்டவை அல்ல! பெயர்கள் 'ஓம்' இல் இருந்து வேறுபட்டவை அல்ல. ஆகவே இவை அனைத்தும் 'ஓம்' தான். பெயருக்கும் அது குறிக்கும் பொருளுக்கும் இடையில் நிலவும் உறவின் மூலமே பரம்பொருள் அறியப்படுகின்றது. அதனால் அதுவும் 'ஓம்' தான். **தஸ்ய =** அதனுடைய, இந்த 'ஓம்' எனும் எழுத்தினுடைய – இது மேலான பிரம்மம். பரப்பிரம்மம், கீழான பிரம்மம் (அபரப்பிரம்மம்) ஆகியவையே. உபவ்யாக்யானம். தெளிவான உரை அது பிரம்மத்துக்கு அருகில் இருப்பது, அது பிரம்மத்தை அடைய ஒருவழியாக இருப்பதும் தான். பூதம் என்றால் இறந்த காலம், பவத் என்றால் நிகழ்காலம், பவிஷ்யத் என்றால் எதிர்காலம் **இதி =** எதெல்லாம் காலம் பற்றிய மூவகைக் கருத்துக்களால் வரையறை செய்யப்பட்டுள்ளதோ அது. **ஸர்வம் ஓம்கார ஏவ =** இவை அனைத்தும் 'ஓம்' தான்.



**ச யத் த்ரிகாலாதீதம்** = இருக்கும் வேறெதுவும், காலத்தின் மூன்று பிரிவுக்கும் அப்பாற்பட்டதும், காலத்தால் வரையறுக்கப்படாமல், அதன் விளைவால் ஊகித்தறியப்படுவது எதுவோ வெளித்தோன்றாத, அவ்யாக்ருதம் எதுவோ, அதுவும் பிறவும், **தத் அபி =** அதுவும், ஓங்கார ஏவ – உண்மையில் ஓம்காரம் தான்.

ஒரு சொல்லும் அதனால் குறிக்கப்படும் பொருளும் வேறு வேறு அல்ல. இருப்பினும், மூலபாடத்தில், ''ஓம் என்ற எழுத்தே இவை அனைத்தும்'' என்று

கூறப்பட்டிருப்பது, அந்தச் சொல்லுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. முதலில் சொல் மீது அழுத்தம் கொடுத்து வருணிக்கப்பட்ட அதே பொருள், மறுபடியும் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கூறப்பட்டிருப்பது, ஏனெனில் பெயரும் (நாமம்) பெயரால் குறிப்பிடப்பட்டிருப்பதும் (நாமீ) ஒன்றே என்பதைப் புரிந்து கொள்ள வசதியாகத்தான். இல்லாவிடில் பொருளானது பெயரைச் சார்ந்து, இருப்பதாகக் கொள்ளப்பட்டு, பொருளும் பெயரும் ஒன்றே என்பது, இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டு விடுமே! அவை இரண்டும் ஒன்றே என்று அறியப்படவேண்டுவது ஏன்? இவை இரண்டும் ஒன்றே என்பது நிலைநிறுத்தப்பட்டால், சாதகன் ஒரே முயற்சியில் பெயர் பொருள் இரண்டையும் விலக்கி, பிரம்மத்தை அறியலாம். பிரம்மம் இரண்டிலிருந்தும் வேறானது ஆகும். இதைத்தான் உபநிஷதம் எட்டாம் மந்திரத்தில் கூறும் பாதங்கள்தான் (கால்வாசிகள் தான் ஓம் என்பதன் எழுத்துக்கள், எழுத்துக்கள்தான் பாதங்கள் (கால்வாசிகள்) இப்போது உபநிஷதம் இவை அனைத்தும் பிரம்மமே என்பதைப் பேசுகின்றது.



**ஸர்வம் ஹ்யேதத் பிரம்ஹாயமாத்மா ப்ரம்ஹ ஸோऽயமாத்மா சதுஷ்பாத்–2–**

இவை அனைத்தும் பிரம்மமே! (நிச்சயம்). இந்த ஆத்மா பிரம்மம். இவ்வாறு இருக்கும் ஆத்மா நான்கு பாதங்களைக் கொண்டது.

**ஸர்வம் ஏதத்** = இவை அனைத்தும், ஓம் என்று பேசப்பட்டவை அனைத்தும், **ப்ரம்மம்** பிரம்மமே. மறைமுகமாகப் பேசப்பட்ட பிரம்மம், இப்போது நேரிடையாக, திட்டவட்டமாக, **அயம் ஆத்மா பிரம்ம.** இந்த ஆத்மா பிரம்மம் என்று கூறப்படுகின்றது. **இந்த ஆத்மாவே பிரம்மம்** என்ற மூலபாடத்தில் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதாக அதே ஆத்மா, ஒருவரின் ஆழமான அந்தரங்கமான ஆத்மா – இதனை – இந்த – எனும் சொல் கையை இதயத்தில் வைத்துக் கொண்டு சொல்லப்படுகின்றது. **ஸ: அயம் ஆத்மா =** ஓம் என்று குறிக்கப்பட்டு, உயர்ந்த பிரம்மமாகவும், தாழ்ந்த பிரம்மமாகவும், இருப்பது, **சதுஷ்பாத்** = நான்கு பாதங்களைக் கொண்டது. (கார்ஷபணம் போல, பசுவைப் போலல்ல; பாதம் என்ற சொல்லுக்கு, கால், கால்வாசி என்று பொருள்கள் உண்டு. கால்வாசி என்ற பொருள் இங்கு ஏற்கப்படும். ஒரு கார்ஷபணம் சிறு காசுகளாக மாற்றப்படக்கூடியது. நான்கு சிறு காசுகள் ஒருபாதம் (கால்வாசி) ஆகும். எட்டு சிறுகாசுகள் ஒரு அரைப்பணம் ஆகும். பெரிய காசில் சிறிய காசுகள் தங்கள் தனித்தன்மையை இழந்து விடுகின்றன. அவ்வாறே விச்வம், தைஜஸிலும், தைஜஸம் ப்ராஜ்ஞத்திலும், பிராஜ்ஞம் துரீயத்திலும் சென்று இணைந்து

ஐக்கியமாகி விடுகின்றன. பாதம் என்ற சொல் திடப்பொருள் எதனையும் குறிப்பதில்லை.

நான்காவதான துரீயம் உண்மையென உணரப்படுவது, ஒன்றன் பின் ஒன்றாக முந்தைய மூன்றையும் (விசுவம் முதலாக) இணைப்பதின்மூலம். மூலபாடத்தில் பதம் என்ற சொல், கரணம் என்ற கருவி என்ற பொருளில் முதல் மூன்று பாதங்களிலும் கருமம் (செயப்படுபொருள்) என்ற பொருளில் துரீயத்திலும் பயன்படுகின்றது.

# ஓம்காரமும், காயத்ரீயும்

**சுவாமி சிவானந்தா**

ஓம் என்பது மிகவும் புனிதமான ஒற்றை அசையாகும். அது ஒரு இறை ரகசிய ஓசையாகும். நாம் உயிர் வாழ்வதும் அசைவதும் ஓம்காரத்தில் தான். ஓம்-இல் நாம் ஓய்வு எடுக்கிறோம். ஓமில் நம் தேடலைச் செய்கிறோம். ஓம் என்பது பிரம்மத்தின் அடையாளச் சின்னம் ஆகும். அது சக்தி வாய்ந்த சொல் ஆகும். ஓம் தான் சச்சிதானந்தம். ஓம் தான் அனந்தம், ஓம் தான் மரணமின்மை - அமிர்தம். ஓம் தான் அனைத்திற்கும் தோற்றுவாய். ஓம்தான் வேதங்களின் கருப்பை. ஓம்தான் மொழிகள் அனைத்திற்கும் அடிப்படை. புனிதங்கள் மூன்றும் ஓமில் இணைந்து ஐக்கியம் ஆகின்றன. ஓம்-இல் இருந்து தான் ஓசைகள் அனைத்தும் துவங்குகின்றன. ஓமில் தான் அனைத்துப் பொருள்களும் தங்கி இருக்கின்றன. ஓம் தான் தலைசிறந்த மந்திரம். ஓம் தான் ஸோஹம். (நானே – அவர்) ஓம் என்பது ஒரு நல்லாசிச் சொல். ஓம் உங்கள் நடத்தைக்கு வழிகாட்டும் பாதைக்கு ஒளி தரும்.

சுவாமி சிவானந்தா



**பரம்பொருளின் ஒலி வடிவிலான புறத்தோற்றம் :** ஓம் என்பது பிரம்மத்தின் இறை ரகசிய ஓசை. ஓசை என்பது அதிர்வொலி ஆகும். ஓம் தான் ஓசையின் முதல் அதிர்வொலி ஆகும். ஓசை தான் பரம்பொருளின் முதல் வெளிப்பாடு ஆகும்.

நமக்கு பரம்பொருளைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அது இருக்கிறது என்பது மட்டுமே தெரியும். சாத்திரங்கள் இப்படைப்புப் பற்றி விளக்கவும் அது பரம்பொருளில் இருந்து எப்படி வெளிவந்தது என்று கூறவும் முற்படுகின்றன.

சாத்திரங்கள் கூறுகின்றன. ஆத்மா அல்லது பிரம்மம் என்பது ஒன்றே. அது இரண்டற்றது. அது எண்ணியது: ‘‘நான் ஒன்றே, பலவாக ஆவேன்’’ இதனால் ஒரு அதிர்வு ஏற்பட்டது. அது இறுதியில் ஒலியை வெளிப்படுத்திற்று. அந்த ஒலிதான் ஓம். ஓம்–இல் இருந்து பிறஅனைத்தும் வெளிப்பட்டன.

இவ்விதத்தில் ஓசை தான் படைப்பனைத்துக்கும் ஆதாரம் என்றே நாம் புரிந்து கொள்ள முடியும். பிரம்மத்தின் அதீத இயல்பை (அனைத்தையும் கடந்த இயல்பை) புரிந்து கொள்ளவே இயலாது. அதனை மிகவும் நெருங்கும் வழி ஓசை தான். அதீத பிரம்மத்தின் முதல் வெளித்தோற்றம் ஓசைதான்.

**ஓம் ஓசைகள் அனைத்திற்கும் ஆதாரம்:** புறப்பொருள்கள் அனைத்தும் ஓசைகளால் (பெயர் ஓசைகளால்) குறிப்பிடப்படுகின்றன. அனைத்து ஓசைகளும் ஓம்–இல் போய் இணைந்து ஐக்கியம் அடைகின்றன. பேச்சு ஒலி அனைத்தும் சொற்கள் அனைத்தும் போய் ஒரு ஓசையில் முடிவடையும். அதுவே ஓம். ஆகவே இவ்வுலகம் முழுவதும் ஓம்–இல் இருந்து வெளிவந்தது, ஓமில் தங்கி இருக்கிறது. ஓமில் கரைந்து முடிகிறது.

நைட்டிங்கேலின் இனிய பாடல் (இராப்பாடிக் குருவியின் பாடல்) தேனீயின் ரீங்காரம், இசையின் ஏழு சுரங்கள், மிருதங்க ஓசை, வீணை, குழல் ஒலி, சிம்ம கர்ஜனை, காதலன் பாட்டு, குதிரை கனைத்தல், நாகப்பாம்பின் சீற்ற ஒலி, நோயுற்றவரின் முனகல், குழந்தையின் அழுகை, இந்த ஓசைகள் அனைத்தும் ஓமில் இருந்து தோன்றியவையே.

கங்கை நீரோட்டத்தின் ஓசை, தொலைவில் ஒலிக்கும் ஒலி, சந்தையின் கூட்டொலி, இயந்திரத்தின் சக்கரத்தைச் சுழற்றும்போது எழும் ஒலி, மழையோசை, இவையனைத்தும் ஓம்கார ஓசைத் தோற்றங்களே. எந்த ஓசையைப் பகுத்துப் பார்த்தாலும் அதில் ஓம் காணப்படும். ஓம் அனைத்தையும் ஊடுருவி நிற்கிறது. ஆகாசத்தைப் போலவே. பிரம்மத்தைப் போலவே.

ஓம் ஓசைகள் அனைத்திற்கும் ஆதாரம். அதில் அ–உ–ம என்று மூன்று ஓசைகள் அடங்கி உள்ளன. இந்த மூன்றும் ஓசை அதிர்வின் வகைகள் அனைத்தையும் உள்ளடக்கிவிடும். தொண்டை (குரல் வளையும்) அண்ணமும் ஓசை எழும் தளங்கள் ஆகும். –அ– என்று நீங்கள் ஒலிக்கும்போது, நாக்கு, அண்ணம் இவற்றின் எந்தப்பகுதியும் தொடப்படாது. –உ– என்று நீங்கள் உச்சரிக்கும்போது, வாயின் அடிப்பகுதி வேரில் இருந்து, வாயில் ஓசை எழுப்பும் தளத்தின் முடிவுப் பகுதி வரை, ஓசை உருண்டு தொடுகிறது. –ம– எனும் கடைசி ஒலி உதடுகளை மூடும் போது கடைசியாக வெளிவிடுவதாகும். ஆகவே எல்லா ஓசைகளும் ஓமில் அடங்கும். மொழிகள் எல்லாம் ஓமில் இருந்தே தொடங்கும்.

ஓம் தான் நான்கு வேதங்களின் சாரப்பொருள் ஆகும். ஓமை ஓதின மனத்தில் ஜபம் செய்தாலும் உலகில் உள்ள புனித நூல்கள் அனைத்தையும் ஓதியதற்குச் சமம். அனைத்து மதங்கள், புனித நூல்கள் அனைத்திற்கும்

தோற்றுவாய், கருப்பை ஓம் தான். ஓம், ஆமென், ஆமீன் என்பதெல்லாம் ஒன்றே. அவை சத்தியத்தை, பிரம்மத்தைக் குறிக்கின்றன. இருப்பாகிய ஒன்றே ஒன்றைக் குறிக்கின்றன. ஓம் இல்லாத வழிபாடு எதுவுமே கிடையாது.

## ஓம் என்பது திரிபுடிகள் (மூன்று மூன்றாக எண்ணப்படும் புனிதக் கொத்துக்கள்) அனைத்தையும் குறிப்பது:-

ஓம் தான் அனைத்தும். அதுவே உங்களுடைய உண்மையான பெயர் அது. மனிதனின் மூவகைத்தான அனுபவ உணர்வுகள் அனைத்தையும் உள்ளடக்கியது. அது புறத்தே தோன்றும் உலகம் முழுவதற்கும் ஆதாரம். ஓம்-இல் இருந்து புலன் உணர்வினால் அறியப்படும் படைப்பு முழுவதும் வெளி நீட்டப்பட்டுள்ளது. 'அ' என்பது, பஞ்சபூத நிலையைக் குறிக்கும். -உ- என்பது, மனம், விண் முதலிய சூக்கும உலக முழுவதையும் குறிக்கும். ஆவிஉலகம், விண்ணுலகையும் குறிக்கும். ம் என்பது ஆழ்ந்த உறக்கத்தைக் குறிக்கும். விழிப்பு நிலையில் நீங்கள் அறிந்து கொள்ள முடியாத அனைத்தையும் குறிக்கும். அறிவினால் எட்டிப் பிடிக்க முடியாத அனைத்தையும் -ம்- குறிக்கும். ஓம் தான் உயிர்வாழ்வு, மன, எண்ணவாழ்வு அனைத்திற்கும் அடிப்படை.

மூன்று மூன்றாய்க் கணக்கிடப்படும் புனிதக் கொத்துக்கள். ஒவ்வொன்றும் ஓம் சின்னத்தால் குறிக்கப்படுகின்றன. உ.ம்: 1) பிரம்மா, விஷ்ணு, சிவா 2) கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் 3) பிறப்பு, வாழ்வு, இறப்பு 4) படைத்தல், காத்தல், அழித்தல், 5) விழிப்பு, கனவு, கனவற்ற உறக்கம்.

மூன்று மூன்றாய் எண்ணப்படும் அனைத்தும் ஓம் சின்னத்தால் குறிக்கப்படுவன. 1) துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி 2) பிதா, மகன், புனித ஆவி 3) ரஜஸ், தமஸ், சத்துவம் 4) தூலம், சூக்குமம், காரணம் 5) சத், சித், ஆனந்தம் 6) அனைத்தையும் அறிதல், அனைத்துச் சக்தியும் கொண்டு இருத்தல், எங்கும் இருத்தல்.

அ என்பது பிரம்மம். ம என்பது மாயை, உ என்பது இந்த இரண்டின் இடையேயான உறவு. ஓம் என்பது தத் த்வம் அஸி, (அதுவாகவே நீ இருக்கிறாய்) என்பதையும் குறிக்கும். அ என்பது ஜீவாத்மா. ம என்பது பகவான், உ என்பது ஜீவாத்மாவையும், பரமாத்மாவையும் இணைப்பது.

ஓம் என்பது மிகவும் முக்கியமான மந்திரம் ஆகும். அதனை எல்லோரும் வழிபடவேண்டும். அதை இரைந்து ஓதவேண்டும். அதன் பொருளுடன் மனத்திலேயே திரும்பத்திரும்பச் சொல்லவேண்டும். ஆழமான உணர்வுடன் ஜபிக்க வேண்டும். அதனைத் தியானமும் பண்ணவேண்டும்.

அமரர் சரஸ்வதி கிருஷ்ணன் அவர்கள் நினைவாக

# நசிகேத மன்றம்

த. ரஜினி, ஆதனூர்

## 1758) மரணம் என்பது துக்கமான விஷயமா? சந்தோசமான மரணம் கிடைக்காதா?

மரணம் என்பது நம் வாழ்நாள் முழுவதும் நாம் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதைப் பொறுத்து துன்பகரமாகவோ, இன்பகரமாகவோ அமையும். காந்திஜியின் சகத் தொண்டரான காக்கா காலேல்கர் **மரணம் என்னும் உற்ற நண்பன்** என்றொரு ஹிந்தி புத்தகம் எழுதி இருக்கிறார். நாம் வாழ்நாள் முழுவதும் நல்லெண்ணங்களையே எண்ணி வந்தால் கடைசி எண்ணமும் நல்லதாகவே இருக்கும். மரணம் நம்மை துன்புறுத்தாது.



மஹாபாரதத்தில் சனத் சுஜாதீயம் என்றொரு பகுதி இருக்கிறது. இது பகவத் கீதையையும், விஷ்ணுசஹஸ்ர நாமத்தையும் போலவே ஆதிசங்கரரால் உரை எழுதப்பட்டது. இந்நூலில் **"கவனக்குறைவே மரணம் ஆகும். விழிப்புணர்வே அமுதம் ஆகும்"** என்ற கருத்து சொல்லப்படுகிறது.

வாழ்க்கையின் சுமையைக் குறைப்பதற்காக இறைவன் நமக்கு பலப்பல ஆறுதல் வாய்ப்புக்களை, அமைதி வாய்ப்புக்களை, ஓய்வு வாய்ப்புக்களை கொடுத்திருக்கிறார். அதில் ஒன்று தூக்கம் ஆகும். நாம் எவ்வளவு களைத்து இருந்தாலும் நல்லதொரு தூக்கம் போட்டால் களைப்பு ஓடிப்போய் விடுகிறது. புத்துணர்வு வருகிறது. நோய்களுக்கான மருந்துகள் பலவற்றில் தூக்க மருந்தும் கலந்து இருக்கின்றது.

இதுபோலவே நமக்கு தீமை செய்தவர்களை மன்னித்து மறந்து விடுவதும் நமக்கு மனத்தில் பெரிய சாந்தியை உண்டாக்கித் தரும். இல்லாவிட்டால் பிறர் நமக்கு ஒரு தடவை தீங்கு செய்திருக்க நாம் அதை ஆயிரம் தடவை நினைத்து நினைத்து நமக்கு நாமே ஆயிரம் தடவை தீமை செய்து கொள்வோம். இதுபோலவே வாழ்க்கையில் துன்பச் சுமைகள் தாங்க முடியாமல் வருகின்ற போது இறைவன் மரணம் என்ற அமுத விருந்தை நல்குகிறார். இப்பிறவியில் நம்முடைய துன்பங்கள், தோல்விகள், ஏமாற்றங்கள் இவற்றை மறந்து வாழ்க்கையைப் புதிதாகத் துவங்க இறைவன் ஒரு வாய்ப்பைத் தருகிறார்.

இதற்காக நாம் செத்து செத்துத் தான் பிழைக்க வேண்டும் என்பதில்லை. நாம் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் பிற எல்லா நினைவுகளில் இருந்தும் நம் மனத்தைப் பிடுங்கி எடுத்து இங்கு கையில் இருக்கும் காரியத்தின் மீது நம் மனத்தைக் குவித்துத் திணிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நம் வாழ்க்கையில் இன்பம் கிட்டும். இதை அடிப்படையாகக் கொண்ட தியான நெறிகளையும், விவேகானந்த கேந்திரம் கற்றுத் தருகிறது. இன்றைய விஞ்ஞானமும் கருந்துளைகள், எதிர்மறை பருப்பொருள் (ஆண்டிமேட்டர்) இப்படி நாம் ஐம்புலன்களால் உணரும் உலகுக்கு மாற்று உலகு இருப்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறது. ஆனால் இவற்றை தர்க்கத்தின் மூலம் விளக்குவது கடினம். நாம் வேலை செய்து கொண்டிருக்கும் போது அலுப்போ, களைப்போ வந்தால் வேலையை நிறுத்தி ஓய்வெடுப்பதன் மூலம் அந்த வேலையை மறுதடவை நன்கு செய்ய முடியும் என்பதை தர்க்கத்தின் மூலம், விஞ்ஞானத்தின் மூலம் விளக்க முடியாது, நிரூபிக்க முடியாது. அனுபவத்தில் மட்டுமே உணரலாம். ஆகவே மனிதனின் செயல் திறமையில் உறக்கம், மறதி, மன்னிப்பு, பற்றின்மை, மரணம் இவை அற்புதப் பணியாற்றுகின்றன.

ப. கல்யாணி, தூத்துக்குடி

***1759) கடவுள் நம் அனைவருக்கும் அன்னமிடுகிறார் என்று நாம் முழுமையாக நம்புகிறோம். இருப்பினும் நாம் இறைவனுக்குப் பிரசாதம் படைப்பதன் நோக்கம் என்ன?***

நமக்கு உணவிடும் இறைவனுக்கு அந்த உணவைக் காட்டி அதிலுள்ள குற்றம் குறைகளை விலக்குகிறோம். பூண்டு, வெங்காயம் போன்ற உணவுப் பொருள்களில் தாமச குணம் இருக்கிறது. அதில் தூசி, தலைமுடி போன்ற அழுக்குகள் விழுந்து இருக்கலாம். உணவைச் சமைப்பவர் கெட்ட எண்ணங்களுடன் சமையல் செய்து இருக்கலாம். இப்படி உணவில் மூன்று வகைக் குறைகளை சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகிறார். இக்குறைகளை நீக்கி நாம் உணவு உண்டால் அந்த உணவு உடல் நலம், மன நலம், ஆன்ம நலம் ஆகியவற்றை நமக்குத் தரும் என்று வேதமும் சொல்லுகிறது. கோவில்களில் பூஜையைப் போலவே பிரசாதம் படைப்பதும் கோவிலின் இறைத் தன்மையை அதிகரிக்கும் என்று அனுபவஸ்தர்கள் கூறுகிறார்கள்.

சி. முத்துசுவாமி, திருநெல்வேலி

***1760) 'தாந்திரிக்' என்னும் மந்திர தந்திரங்கள் சம்பந்தமான விஷயங்கள் மிகவும் மறைபொருளாக இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வைக்கப்பட்டிருந்ததாகவும், கல்கத்தாவைச் சேர்ந்த ஜான் வுட்ரோப் என்னும் ஆங்கிலேய நீதிபதி ஒருவர் தான் இதனை வெளியே கொண்டு வந்தார் என்றும் என் நண்பர் ஒருவர் கூறினார். இது உண்மையா? இதுபற்றிய விளக்கம் தரலாமா?***

இமயமலையில் இருந்து மூன்று விதமான சாதனை நெறிகள் இறைவனை அடையும் வழிகள் மனிதகுலத்திற்கு கிடைத்துள்ளன. ஒன்று ஞான நெறி ஆகும், அறிவு நெறி ஆகும். இரண்டாவது யோக நெறி ஆகும். இதில் சிவ வழிபாடு பெரும் முக்கியத்துவம் கொண்டது. மூன்றாவது தந்திரம் என்னும் நெறி ஆகும். இதில் பெரும்பாலும் பராசக்தி வழிபாட்டுக்குச் சிறப்பிடம் உண்டு. நான் என்னும் உணர்வு எங்கிருந்து தோன்றுகிறது என்பதை ஆராயவும், தேடவும் அறிவுத் தூண்டுதல், யோக நெறி தூண்டுதல், புலனின்ப தூண்டுதல் ஆகியவற்றையே இம்மூன்றும் குறிப்பதாகக் கொள்ளலாம். இவற்றுள் தந்திரம் என்பதில் புலனின்பங்களை மிகுந்த கவனத்துடன் அனுபவிக்க வேண்டும். இதற்காகவே திருக்கோவில் வழிபாட்டில் கண்ணால் அழகிய காட்சிகளைக் காணுதல், காதால் இனிய ஓசைகளைக் கேட்டல், தோலால் இனிய உணர்வுகளை தொட்டுணர்தல் (மலர், சாமரம்) மூக்கால் நறுமணங்களை முகர்தல் (சாம்பிராணி ஊதுபத்தி) நாக்கால் நற்சுவையை அனுபவித்தல் (பிரசாதம் உண்ணுதல்) ஆகியவற்றைப் பின்பற்றுவார்கள். இதை பாரதத்தின் கிழக்கு, வடகிழக்கு பகுதிகளில் நிறைய பேர் நடைமுறையில் பின்பற்றி இருக்கிறார்கள். பைரவி பிராம்மணி என்ற தந்திர சாத்திர ஆசிரியை ஸ்ரீராமகிருஷ்ணருக்கு இச்சாத்திரங்களில் பயிற்சி தந்தது வரலாற்று உண்மை ஆகும். இருபதாம் நூற்றாண்டில் ஆரம்ப பத்து ஆண்டுகளில் கல்கத்தாவில் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த சர் ஜாண் உட்ராஃப் என்பவர் ஆர்தர் ஆவ்லான் என்ற புனைப் பெயரில் இத்தந்திர சாத்திரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவரே ஹிந்து புரோகிதரைப் போல வேட்டி உடுத்தி காட்சி அளித்தார். சுவாமி விவேகானந்தர் பால் மரியாதை கொண்டிருந்த உட்ராஃப் பேலூர் மடமும் வந்து அஞ்சலி செலுத்தி இருக்கிறார். பாரதப் பண்பாட்டை மட்டம் தட்டிப் பேசிய ஐரோப்பியர்களுக்கு மிகச்சிறந்த பதிலடியை சர் ஜாண் உட்ராஃப் கொடுத்துள்ளார். அவருடைய நூல்கள் அனைத்தும் கன்னியாகுமரி கேந்திர நூலகத்தில் இருக்கின்றன. கேரளத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் கூட கோவில் வழிபாட்டில் தந்திர சாத்திர நெறி பின்பற்றப்படுகிறது. கேரள மாநில திருச்சூரில் தந்திர சாத்திரத்திற்கும் வேதத்திற்கும் உள்ள தொடர்பை ஆராயும் ஆராய்ச்சி மையம் பணிபுரிகிறது.

**ஆர்தர் ஆவ்லான்**



பிரபா லிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர், கன்னியகுமரி மாவட்டம்

***1761) காசியில் இறக்கும் உயிர்களின் காதில் 'ராமா' என்று சிவபெருமானே ஜெபித்து மோட்சம் அளிப்பதாக ஒரு ஐதீகம் சொல்லப்படுகிறது. இது சைவ மதத்தின் மீது வைணவர்கள் ஆளுமை செலுத்தும் யுக்தி என்கிறேன், தாங்கள்?***

வேதங்களும், புராணங்களும், சைவத்தையும், வைணவத்தையும் சமமாகக் கருதி பல இடங்களில் பேசுகின்றன. வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் பக்தியின் ஆழத்தையும் கருதித் தன் தெய்வம் உயர்ந்தது என்று பேசும் போது பிற தெய்வங்களை நிந்தனை செய்யக் கூடாது. இதை அக்னி புராணமும் வற்புறுத்துகிறது. ஆதிசங்கரர் விஷ்ணுவையும், சிவனையும் குறித்துப் பல தோத்திரங்களை இயற்றி உள்ளார். சங்கர மடங்களில் சிவனுக்குப் பூஜை செய்வார்கள். அவற்றின் துறவிகள் பக்தர்களுக்கு ஆசி கூறும் போதும் கடிதங்களின் இறுதியிலும் நாராயணனை நினைத்து வழிபடுவார்கள்.



இவ்வாறு சைவ, வைணவ சமத்துவத்தைப் பேசுவது நம் மதத்தின் சிறப்பு ஆகும். தென் பாரதத்தின் ஐயப்பனை ஹரிஹரசுதன் என்று கொண்டாடுகிறோம். ஐயா வைகுண்டர் என்ற மகான் சைவ, வைஷ்ணவ சமத்துவத்திற்காகப் பாடுபட்ட பெருமையாளர் ஆவர். ஆகவே இப்படிப்பட்ட புராணக் கதைகளில் ஏற்றத் தாழ்வுக்கு இடம் இல்லை. காசியில் மரணம் அடைந்தவர் காதில் சிவபெருமான் ராமநாமத்தை ஓதுவதாக ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார். அவர் காலத்திற்கு முன்பு இருந்த புராண நம்பிக்கையை ஸ்ரீராமகிருஷ்ணர் உறுதிப்படுத்தி உள்ளார். ராமேஸ்வரத்தின் ராமபிரான் சிவனுக்குக் கோவில் எடுத்ததை நாயன்மார்கள் தேவாரப் பாடல்களில் பல தடவை குறிப்பிட்டு உள்ளார்கள். நம் நாட்டில் உண்மையான பக்தர்கள் காசியையும், ராமேஸ்வரத்தையும் தரிசிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளது. இதை விளக்கும் ஒரு கதை உண்டு. ஒரு பக்தர் ராமபிரானிடம் போய் ராமநாதர் என்ற பெயரில் ராமேஸ்வரத்தில் சிவன் விளங்குகிறாரே அந்தப் பெயருக்கு என்ன பொருள் என்று கேட்டார். அதற்கு ராமன் ''யாரை ராமன் தன்னுடைய நாதனாக, தலைவனாகக் கொண்டிருக்கிறானோ அந்த சிவபெருமானே ராமநாதன் ஆவார்'' என்று பதில் சொன்னார். இதே கேள்வியை சிவபெருமானிடம் பக்தர்கள் கேட்டார்கள். அதற்கு சிவன் ''ராமனை யார் தன் நாதனாகக் கொண்டிருக்கிறாரோ, தலைவனாக ஏற்றிருக்கிறாரோ அவரே ராமநாதன்'' என்று பதில் சொன்னார். இதே கேள்வியை பிரம்மாவிடம் பக்தர்கள் கேட்டார்கள். அவர் சிரித்துக் கொண்டே ''யார் ராமனோ அவரே சிவன் (நாதன்) யார் சிவனோ அவரே ராமர். இதுவே ராமநாதர் என்ற சொல்லின் பொருள்'' என்று கூறினார். இறைவன் ஒருவர். அவர் பல பெயர்களுடன் விளங்குகிறார். ஏற்றத்தாழ்வுகட்கு இங்கு இடம் கிடையாது.

நகர்ப்புற மாணவர் கலை விழா பெற்றோர் ஆசிரியர் வகுப்பு

### *1762) ஆன்மீகச் சேவை புரிவதற்கு குடும்பத்தில் இருந்து வருவது எளிதான காரியமா?*

மனத்தில் தீவிர விருப்பம் இருந்தால் ஆன்மீகச் சேவையை இல்லறத்தில் இருந்தபடியே செய்ய முடியும். விவேகானந்த கேந்திரத்தில் ஆயுட்காலத் தொண்டர்களிலும் ஓரிருவர் இல்லறத்தவர் உண்டு. மற்றபடி ஆசிரியர்கள், சமூக சேவகர்கள், உள்ளூர்த் தொண்டர்கள், பகுதிநேரத் தொண்டர்கள் இப்படி பல நிலைகளில் கேந்திரத் தொண்டர்கள் இல்லறத்தில் இருந்தபடியே சிறப்பான பணி ஆற்றுகிறார்கள். பல குடும்பங்களில் கணவன், மனைவி, குழந்தை எல்லோருமே ஆன்மீகத் தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து நற்பணி ஆற்றுகிறார்கள்.

அசோக் குமார், கோவில்பட்டி

### *1763) மன நிறைவு, மனக்கஷ்டங்களுக்கு ஆன்மீகம் எந்த அளவுக்கு உபயோகப்படும்?*

மனம் நேரடி பிரச்சினைகளால் துன்புறுவதைக் காட்டிலும் பழைய நினைவுகளாலும், எதிர்காலத்தைப் பற்றிய அச்சங்களாலும் துன்புறுவதே அதிகம் ஆகும். பழைய கால நினைவுகளைப் பாசம் என்றும், எதிர்கால விருப்பங்களை ஆசை என்றும் பகவத்கீதை குறிப்பிடும். ஆசை, பாசம் என்ற நூறுவிதமான விலங்குகளால் மனிதர்கள் கட்டிப் போடப்பட்டு இருக்கிறார்கள். நற்காரியங்களை இறைவன் நினைவில் ஆற்றும் போதும் இறைவனையே தியானம் செய்யும் போதும் நம் துன்பங்கள் குறையும் என்ற நம்பிக்கையும், துன்பங்களில் இருந்து மனம் அகலும்போது ஏற்படும் நிறைவும் மனத்திற்கு மிகுந்த சாந்தியை அளிக்கின்றன. ஆகவே துன்பங்களில் இருந்து உழல்பவர்கள் முதலில் இறைவனின் பணியை மனமொன்றி செய்து நிம்மதி காணலாம். இறைவனை நினைந்தும் ஜபம், தியானம் செய்தும், நன்னூல் ஓதியும் நிம்மதி பெறலாம்.

காளீஸ்வரன், ராஜபாளையம்

### *1764) பல யுகங்களில் இறைவன் அவதாரம் எடுத்து பக்தர்களுக்குக் காட்சி தந்துள்ளதாகவும் புராணங்கள் கூறுகிறதே! ஏன் தற்பொழுது நடக்கும் கலியுகம் இறைவன் காட்சி தரவேண்டாத யுகமா? பாவம் செய்தவர்கள் புண்ணியம் செய்தவர்களை விட மிக நன்றாக வாழ்கிறார்களே ஏன் இந்த மிகப் பெரிய முரண்பாடு?*

இறை அவதாரம் பல வழிகளில் மனிதனை நல்வழிப்படுத்தும். நரசிம்ம அவதாரம், கஜேந்திரவரதர் போன்று இறைவனே உடனடியாக வந்து பக்தரின் துன்பத்தைத் தீர்ப்பது உண்டு. ராமாவதாரம் போன்று குரங்குகளையும், கரடிகளையும் தூண்டி விட்டு மகத்தான பணி செய்ய வைப்பதுண்டு. கிருஷ்ணா

அவதாரம் போன்று அர்ஜுனனுக்கு அறிவைக் கொடுத்து அவனே தன் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள உதவுவது உண்டு. ராமகிருஷ்ண அவதாரம் போல் நல்ல எண்ணிக்கையில் சீடர்களை உருவாக்கி பிரச்சினைகளைத் தீர்ப்பதுண்டு. கபில அவதாரத்தைப் போல் தத்தாத்திரேயர் அவதாரத்தைப் போல் அறநூல்ளை மக்களுக்கு உபதேசித்து அதன் வழி நிற்பவர்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வழிகோலுவது உண்டு. பல ஞானிகளைத் தந்து அவர்களை உதாரணங்களாகவும், உபதேசம் செய்பவர்களாகவும் காட்டுவது உண்டு. இப்படிப் பார்த்தால் நம் நாட்டில் இந்தக் காலத்திலும் அவதாரங்களுக்குக் குறைவே இல்லை. அவர்களுடைய உபதேசங்களைக் கேட்டுணர்ந்து அதன்படி நின்று மனிதன் தன்னை உயர்த்திக் கொள்வதும், சமுதாயத்தை உயர்த்திக் கொள்வதும் புருஷார்த்தம் எனப்படும். அதுவே இப்போது பயன்படுவது தேவைப்படுவது!

எம். செல்வி, மலையடிக்குறிச்சி, கோவில்பட்டி

### *1765) சாணத்தில் பிள்ளையார் பிடிக்கும் போது அதன்மேல் ஏன் அருகம்புல்லை வைக்கிறார்கள்?*

வேதத்திலேயே தூர்வாசூக்தம் என்ற அருகம்புல்லின் துதி வருகிறது. அருகம்புல் மிக உயர்ந்த வயிற்றுவலி மருந்து ஆகும். பெரும்பாலும் தெய்வங்களுக்குப் படைக்கப்படுகிற மலர்களும், வேர்களும், காய், கனிகளும் பக்தர்களுக்கும் மருத்துவப் பயனை தருபவையாகவே இருக்கும். இறை வழிபாடு மருத்துவ பயன் வழிபாட்டில் எளிமை ஆகிய பல நற்குணங்கள் அருகம்புல் வழிபாட்டில் அடங்கி உள்ளது. இந்துமதத்தில் இயற்கை வழிபாடு முக்கியமானது.

சி. லீலா, பேயங்குழி, கன்னியாகுமரி மாவட்டம்

### *1766) கோவிலில் வசந்த மண்டபம் என்று வைத்திருக்கிறார்கள். அதற்கு விளக்கம் என்ன?*

உயிரினங்கள் பல்கிப் பெருக உதவும் வசந்தகாலம் படைப்பில் மிகப் புனிதமானது. கண்ணன் பகவத்கீதையில் ருதுக்களின் (பருவங்களில்) நான் வசந்தகாலமாக இருக்கிறேன் என்று கூறுகிறார். உயிர்கள் பல்கிப் பெருகுவதற்குத் தேவையான அழகுணர்ச்சி இயற்கையில் தெளிவாகத் தெரியும்படியாக மரங்கள் எல்லாம், செடிகள் எல்லாம் பூத்துக் குலுங்குவது வசந்த காலம் ஆகும். அப்போது கோவிலின் உள்ளேயோ அல்லது கோவிலுக்கு வெளியேயோ சிறப்பான குளிர்ந்த பூந்தோட்டத்திலேயே ஊஞ்சல் போட்டு சுவாமியையும், தேவியையும் எழுந்தருளச் செய்வார்கள். சிறப்பு வழிபாடும் நடக்கும். இத்தகைய வசந்த மண்டபங்கள் கோவிலுக்கு உள்ளேயே அமைவதும் உண்டு. தொலைவில் பூந்தோட்டத்தின் நடுவில் அமைவதும் உண்டு. ஸ்ரீராமானுஜர் ஒவ்வொரு பருவத்திற்கும் (இரண்டிரண்டு மாதங்கள் கொண்ட ஆறு ருதுக்களுக்கும்) உரிய திவ்விய பிரபந்தப் பாடல்களை ஓதுவதற்காக வகுத்துக் கொடுத்திருக்கிறார். அத்தகைய பாடல்களைச் சிறப்பாக ஓதுவதும் உண்டு. பொதுவாக எல்லாப் பெரிய கோவில்களிலும் வசந்த மண்டபம் அமைந்திருக்கும்.

சத்திய பாமா, கோவில்பட்டி

***1767) கிராமங்கள் இந்தியாவின் முதுகெலும்பு ஆனால் ரியல் எஸ்டேட் என்ற பெயரில் அவற்றை அழிக்கிறோமோ? இதை எப்படித் தடுப்பது?***

இதற்கு பல தளங்களில் சிகிச்சை அளிக்க வேண்டும். மக்களிடம் உடல் உழைப்புக்கு மரியாதை குறைந்து வருகிறது. அளவுக்கு மீறி இயந்திரங்களைச் சார்ந்து இருப்பதால் உடல் மந்தம் அடைந்து பல நோய்கள் பெருகுகின்றன.

பெருகி வரும் மக்கள் தொகையின் காரணமாக ஒவ்வொருவருக்கும் உரிய விளைச்சல் நிலத்தின் அளவு குறைந்து கொண்டே போகிறது. இது உலகில் பயங்கரமான உணவு நெருக்கடியை உண்டாக்கப் போகிறது என்று ஐ.நா. சங்கம் பல தடவை உலக மக்களை எச்சரித்து வந்திருக்கிறது.

நல்ல விளைச்சல் நிலமாகக் காட்டு நிலத்தை மாற்றுவது எளிதல்ல. தரிசு நிலம், காட்டு நிலம், மலை நிலம், தானியங்கள் விளையும் நிலமாக மாறுவதற்கு, நிலத்தின் மேல் மண் பதப்படுவதற்கு, பல நூற்றாண்டுகள் பிடிக்கும். அத்தகைய நல்ல நிலத்தை செங்கல் சூளை போடுவது, வீடு கட்டுவது போன்ற வேறு பயன்களுக்கு மாற்றுவது மனிதகுலத்திற்குச் செய்யப்படும் மிகப் பெரிய துரோகம் ஆகும்.

நல்ல நிலத்தை வேறு பணிகளுக்கு மாற்றுகின்ற வேகத்தில் சாதாரண நிலத்தை தானியம் விளையும் நிலமாக மாற்ற முடியாது. இந்த விஷயத்தில் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் பல அறிஞர்களும் கூட இந்த ஆபத்தைத் தவறாக எடை போட்டிருக்கிறார்கள்.

விளைச்சல் நிலத்தை வேறு பயன்களுக்குக் கொண்டு செல்வதைத் தடுக்கும் சட்டங்கள் நாட்டில் நிறைய இருக்கின்றன. லஞ்ச ஊழல் மூலம் இச்சடங்குகள் மீறப்படுகின்றன. பரவலான விழிப்புணர்வு, ஓரளவுக்கு வற்புறுத்தல், கட்டாயப்படுத்துதல், தண்டித்தல் இவற்றின் மூலம் தான் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர முடியும். இல்லாவிட்டால் உணவுப் பஞ்சம் பயங்கரமான முறையில் உலகைப் பிடித்துக் கொள்ளும்.

**இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி**
**விவேகானந்தா இன்ஸ்டிட்யூட் ஆஃப்**
**லிங்க்விஸ்டிக் ஸ்கில்ஸ் பிரைவேட் (லிட்)**
**சென்னை–600 049**

# இதயத்தைத் திருடும் இனிய கதைகள்

**ஏக்நாத்ஜி கூறியது**

## 1771) ஒன்று சேர்க்க முயல்வாயாக; புதுச்சாதி வேண்டாம்

விவேகானந்த கேந்திரமும் அதன் சக்திக்கேற்ப அளவில் நாட்டில் உள்ள பற்பல ஆன்மீகச் சக்திகளை தேசப் புனர் நிர்மாணத்திற்கென ஒன்று சேர்க்கவே முயன்று வருகிறது. விவேகானந்தர் தன் சொந்தக் கொள்கை என்று எதையும் பிரச்சாரம் செய்யாமல், வேத உபநிடதக் கருத்துக்களை உலக மக்களுக்கு எடுத்துக்கூறி, நம் இந்திய பழம்பெரும் சிந்தனைகளுக்கு புது ஒளியையும், உத்வேகத்தையும் ஊட்டினார். அவர் இவ்விதம் செயல்படுகையில் வேறு சில இடங்களில், சீடர்கள் தங்கள் குருமார்களுக்கு ஒரு புதிய போர்வையைப் போற்றி, அவர்கள் ஒரு புது மதப்பிரிவையே தோற்றுவிக்க வந்த ஆசான்கள் என்று பொய்ப் பிரச்சாரம் செய்ய முற்பட்டனர். இந்து சமூகத்தைப் புனரமைத்து மேம்படுத்த வேண்டும் என்ற சீரிய நோக்கத்தினைக் கருத்தில் கொண்டே ஸ்வாமி தயானந்த சரஸ்வதி ஆர்ய சமாஜம் என்ற ஸ்தாபனத்தை நிறுவினார். ஆனால் நடந்தது என்ன? ஆர்ய சமாஜம் இந்து மதப் பிரிவுகளுக்குள் மேலும் இன்னொரு பிரிவாக ஆகிவிட்டது. இதுபோலவே குருநானக் தோற்றுவித்த அமைப்பும், அவர் நோக்கம் தீவிர தெய்வ பக்தி உள்ளமும், எதிர்ப்புச் சக்தியும் கொண்ட இந்து சமூகத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்பதே. ஆனால் இதன்மூலம் ஒரு புது மதமே (சீக்கிய மதம்) தோன்றி அதைச் சார்ந்தவர்கள் தாங்கள் இந்துக்களே அல்லர் என்று கூறவும் தலைப்பட்டனர். 1938–39–ம் ஆண்டுகளில் இந்துக்கள், ஆர்ய சமாஜத்தினர், சீக்கியர்கள் இவர்களிடையே சண்டையும், சச்சரவுகளும் நடைபெற்றன. 1940–ம் ஆண்டு எடுத்த ஜனத்தொகைக் கணிப்பின் போது, ஆரிய சமாஜத்தினர் தங்களை இந்துக்களாகக் கணக்கிட மறுத்து தங்களை ‘ஆர்யர்கள்’ என்று கூறலாயினர். இந்து சமூகத்தை இணைத்து, சாதிகளையும், பிரிவுகளையும் அகற்றிடும் முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட்டு விட்டன. இருக்கும் சாதிகளோடு மேலும் ஒன்று சேர்ந்துள்ளதையே நாம் இன்று காண்கிறோம்.



வினோபாஜி கூறியது

## 1772) மரணத்தை மறக்க முடியுமா?

மரணத்தை மறப்பதற்கான முயற்சி எல்லாவிடங்களிலும் மூர்த்தன்னியமாய் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதனாலெல்லாம் மரணத்தைத் தவிர்க்க வியலுமா? நேற்று தாய் இறந்த பொழுது மரணம் எதிரிலே வந்து நின்றதே! மனிதன் அஞ்சாது மரணத்தைக் குறித்துச் சிந்தித்து அதைக் கடப்பதற்கான வழியைக் கண்டு பிடிக்கத் துணிவதில்லை. ஒரு மானை ஒரு சிங்கம் துரத்திக் கொண்டு போகிறது. துருதுரு வென்றிருப்பதாகையால் மான் நாற்கால் பாய்ச்சலில் ஓடுகிறது. ஆனால் போகப் போக அதன் சக்தி குறைந்து கொண்டே போய், அது இறுதியில் களைத்துப் போகிறது. பின்னாலோ சிங்கமென்ற எமன் ஓடி வந்து கொண்டே இருக்கிறது. அச்சமயத்தில் அம் மானின் நிலை



எவ்வாறிருக்கும்? சிங்கத்தின் பக்கம் பார்க்கவே அதற்கு முடியவில்லை. அது தரையில் தன் கொம்புகளையும், முகத்தையும் புதைத்துக் கொண்டு நிராதரவாய் நின்று விடுகிறது. இப்பொழுது நீ வந்து என்னைச் சாப்பிடலாம் என்று அழைப்பது போலிருக்கிறது அது நின்று கொண்டிருக்கும் நிலை. நாம் மரணத்தை நம் எதிரில் பார்க்க விரும்புவதில்லை. அதன் கையிலிருந்து தப்புவதற்காக ஆயிரம் உபாயங்கள், யுக்திகள் செய்த போதிலும் அது தன் பேராற்றலினால் இறுதியில் நம் கழுத்தைப் பிடித்து நெறித்தே விடுகிறது.

சந்திர சுவாமி உதாஸீன் கூறியது

## 1773) மங்கள மரணம்

பணக்காரன் அமுதநாதன் மகாத்மா தீர்க்காயுவி –டம் போனான். அவரிடம் அடிக்கடி கெஞ்சி தனக்கொரு மங்களகரமான வாக்கியத்தை எழுதிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அந்த மங்களகரமான ஆசீர்வாத வாக்கியத்தை அமுதநாதன் தன் வீட்டில் வைத்து பல தலைமுறைகளுக்கு பூஜை செய்வான். மகாத்மா தீர்க்காயு ஒரு காகிதத்தை எடுத்தார். அதில் பின் வருமாறு எழுதினார். 1) தந்தை இறந்தார், 2) மகன்

இறந்தான், 3) பேரன் இறந்தான் என்று எழுதிக் கொடுத்தார். இதைப் படித்ததும் அமுதநாதனுக்கு மிகுந்த பயம் உண்டாயிற்று. அவன் அழுது கொண்டே சொன்னான். ஐயா என் குடும்பத்திற்கு மங்களகரமான ஆசிகளை எழுதித் தரும்படி நான் வேண்டினேன். ஆனால் நீங்களோ பெரிய சாபத்தைக் குறிக்கும் சொற்களை அல்லவா எழுதிக் கொடுத்து இருக்கிறீர்கள் மகாத்மாவே!


தீர்க்காயு ஆழ்ந்த சிந்தனையுடன் கூறினார். நன்கு சிந்தித்துப் பார். எல்லோரும் ஒருநாள் மரணம் அடையவே வேண்டும். ஆனால் தந்தை மரணம் அடைவதற்கு முன்பாகவே மகனோ அல்லது பேரனோ மரணம் அடைந்து விட்டால் எவ்வளவு அமங்களமாக இருக்கும்? மரணம் அடையாமல் யாருமே எஞ்சியிருக்கப் போவதில்லை. அதனால் முதலில் தந்தை பிறகு மகன் அப்புறம் பேரன். இந்த வரிசையில் குடும்பத்தில் மரணங்கள் நிகழ்ந்தால் இது ஒரு ஆசீர்வாதமே அல்லவா?

**இக்கதையின் தத்துவம்:** முனிவர்களின் வாக்கில் ஆசீர்வாதம், ரகசியமாக மறைந்து கிடக்கிறது. பிறந்தவன் இறப்பது நிச்சயம். மரணமானது மனித வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாகும். ஆனால் வரிசை தவறிய மரணம் மங்களத்தைக் குறிக்காது.

சிருங்கேரி சங்கராச்சாரியார் கூறியது

## 1774) எண்ணங்களே வாழ்க்கையை உருவாக்கும்

ரிஷபன் என்ற மன்னனுக்கு பரதன் என்ற மூத்த மகன் இருந்தான். ரிஷபனுக்குப் பிறகு பரதன் மன்னன் ஆனான். பரதனின் மனைவியின் பெயர் பாஞ்சஜனி. பரதன் தரும சாத்திரங்களைக் கற்றறிந்து அவற்றின்படி தன் நாட்டை ஆண்டு வந்தான். மக்களை அன்புடன் நடத்தினான். மக்களும் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்து வந்தார்கள். தங்கள் மன்னன் மீது மக்களுக்குப் பெரும் மதிப்பு இருந்தது. பரதன் பல யாகங்களைச் செய்து வந்தான். விஷ்ணு பகவானை வழிபட்டான். நீண்ட காலம் நல்லாட்சி செய்தபின் தன் மகன்களுக்கு நாட்டைக் கொடுத்துவிட்டு தவம் செய்யப் போனான். அவன் தவம் செய்த இடம் கண்டகி நதிக்கரையில் அமைந்த சாலிக்கிராமம் என்ற இடம் ஆகும்.



பரதன் தவம் செய்யும் போது ஒரு மான் ஒரு குட்டியைப் போட்டு விட்டு இறந்து போனதைக் கண்டான். கருணை பொங்க அந்த மானை எடுத்து அன்புடன் வளர்த்தான். அவன் மரணம் அடையும் கணத்திலும் அந்த மான்குட்டியைப் பற்றிய கவலையே அவன் மனத்தில் மேலெழுந்து நின்றது.

இந்தப் பற்றுதலின் காரணமாக அவன் ஒரு மானாகவே பிறப்பெடுத்தான். திரும்பவும் சாலிக் கிராமத்திற்குப் போய் தன் மரணம் வரும் வரை காத்து இருந்தான். ஒரு அந்தணரின் ஒரே மகனாக மறுபிறவி எடுத்தான். அவனுக்குத் தன் பழைய பிறவிகள் எல்லாம் நினைவில் இருந்தன. அதனால் எந்தப் பொருளின் மீதும் பற்றுதல் வைக்கக்கூடாது என்பதைக் கவனமாகப் பின்பற்றி வந்தான். தவம் செய்து இறைவனை அடைந்தான். அவன் வெளிப் பார்வைக்கு ஒரு அடிமடையனைப் போல தோற்றம் அளித்தான். ஆனால் அவனுடைய அடிமனமோ இறையறிவு ஊறித் தெளிந்து இருந்தது. பரதனின் உறவினர்கள் அவனை ஒரு முட்டாள் என்று கருதி அலட்சியமாக நடத்தினர். ஒரு கொள்ளைக்காரன் பரதனை தன் தெய்வத்திற்குப் பலிகொடுக்க முயற்சி செய்தான். காளி பரதனைக் காப்பாற்றி பகைவர்களை அழித்து விட்டாள்.

சிந்து சவ்வீரா நாட்டு மன்னன் ஒரு பல்லக்கில் ஏறிப் போகும் போது பல்லக்கு தூக்கிகள் பரதனை ஒரு மடையனாக நினைத்து அவனையும் மன்னனின் பல்லக்கைத் தூக்கும்படி செய்தனர். பரதனும் முணுமுணுக்காமல் பல்லக்கைத் தூக்கினான். அவன் தூக்கிய பக்கம் அடிக்கடி குலுங்கியது. மன்னன் அவனை வசை பாடினான். மன்னன் மீது இரக்கம் கொண்ட பரதன் மன்னனுக்கு இறைஞானத்தை உபதேசித்தான். குண்டு, ஒல்லி என்பது உடம்பைக் குறிக்கும். ஆத்மாவைக் குறிக்காது. உடல் மண்ணால் ஆனது. பல்லக்கும் மண்ணால் ஆனது. பல்லக்குத் தூக்கிகளும் மண்ணால் செய்யப்பட்டவர்கள். நான் எதையும் செய்வதில்லை பிரஜ்ஞை ஒன்றே சத்தியமானது. மற்றவையெல்லாம் வெறும் தோற்றங்களே. மன்னன் பரதமுனிவரின் உபதேசத்தால் பெரும் பயன் அடைந்தான். பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்த பரதன் உடம்பை விட்டு முக்தி அடைந்தான். இந்த வகை முக்திக்கு விதேக முக்தி என்று பெயர். பரதனின் மனமே அவனுடைய மறுபிறவிக்கும் காரணம், ஞானத்திற்கும் காரணம், முக்திக்கும் காரணம். மைத்ராயணி உபநிஷதம் கூறுகிறது. மனம் இரண்டு வகைப்படும். ஆசைகளும், விருப்பங்களும் மனத்தை அழுக்காக்கும். ஆசையற்ற மனம் தூய்மையானது. அடிமைப்படுவதற்கும் சுதந்திரம் அடைவதற்கும் மனமே காரணம். பொருள்களில் பற்று கொண்டால் மனம் விலங்கால் கட்டுப்படுகிறது. எண்ணங்களற்ற மனம் விடுதலை அடைகிறது. பரதனின் பற்றும், பற்றின்மையும் அவனுக்குப் பிறவியையும் அழித்தன, முக்தியையும் கொடுத்தன.

ராதாஸ்வாமி சத்சங்கத்தினர் கூறியது

# 1775) முட்டாள் வியாபாரியும், பரிச வேதியும்

முனிவர் தங்கசாமி வியாபாரி வில்லங்கதாசனின் வீட்டுக்கு வந்திருந்தார். வியாபாரி வில்லங்கதாசன் முனிவரிடம் கெஞ்சினான். ஐயா என்னுடைய வியாபாரம் படுத்து விட்டது. நான் ஏழை ஆனேன். இந்தப் பயங்கரமான வறுமையை ஒழித்து என்மீது கருணை காட்டுங்கள்.

முனிவர் தங்கசாமியின் மனத்தில் கருணை பொங்கிற்று. அவர் பரிசவேதி என்னும் மந்திரக்கல்லை அந்த ஏழையிடம் கொடுத்தார். இக்கல்லால் இரும்பு முதலிய விலை குறைந்த உலோகங்களைத் தொட்டால் அவை தங்கமாகிவிடும். இந்த மந்திரக்கல்லை உனக்கு மூன்றே மூன்று மாதங்கள் கொடுத்து வைக்கிறேன். அதற்குள் நிறைய தங்கத்தை உண்டாக்கிக் கொள். அதற்குப் பிறகு மாயக் கல்லை திரும்பவும் எடுத்துக் கொண்டு விடுவேன் என்றார்.

மகிழ்ச்சியுடன் மந்திரக் கல்லை வில்லங்கதாசன் பெற்றுக் கொண்டான். கடைத்தெருவுக்குப் போய் பழைய இரும்பு என்ன விலை என்று விசாரித்தான். நூறு கிலோ ஏழு ரூபாய் என்று பதில் கிடைத்தது. போன மாதம் நூறு கிலோ விலை ஐந்து ரூபாயாக இருந்தது. இந்த மாதம் விலை கூடிவிட்டது என்றான் கடைக்காரன். வியாபாரி வில்லங்கதாசன் யோசித்தான். விலை உயர்ந்து இருக்கும் போது இரும்பை வாங்குவது முட்டாள்தனம். இரும்பு விலை குறையும் வரை நான் காத்திருப்பேன். அடுத்த மாதம் விலை குறையும்.

அந்த ஏழை முட்டாளாகவும் இருந்தான். நூறு கிலோ இரும்பை தங்கமாக மாற்றினால் எவ்வளவு செல்வம் கிடைத்திருக்கும்!

ஒருமாதம் கழித்து வில்லங்கதாசன் மறுபடியும் கடைத்தெருவுக்குப் போய் இரும்பின் விலையை விசாரித்தான். பழைய இரும்பு விலை நூறு கிலோவுக்கு பதினைந்து ரூபாயாக உயர்ந்திருந்தது. வில்லங்கதாசன் யோசித்தான். இவ்வளவு உயர்ந்த விலை கொடுத்து பழைய இரும்பை வாங்குவதா? இன்னும் கொஞ்சம் காத்து இருந்தால் இரும்பு விலை குறையுமே. மூன்றாம் மாதம் இரும்பு விலை இருபது ரூபாய் ஆகிவிட்டது. மேலும் காத்து இருக்க வில்லங்கதாசன் முடிவு செய்தான். ஆனால் அந்தோ பரிதாபம்! முனிவர் தங்கசாமி மூன்று மாத காலக்கெடுவுக்குப் பின் திரும்பி வந்தார். மாயக்கல்லைப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டார். வியாபாரி வில்லங்கதாசன் ஏழ்மையிலும், வருத்தத்திலும் முன்பு போலவே உழன்று கொண்டிருந்தான்.

கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் வாழ்நாள் இந்த மாயக்கல் ஆகும். அது நமக்குக் கிடைத்திருப்பது கடவுளின் அருளே. நமக்குள்ளே கடவுளே இருக்கிறார். அவரை நாம் கண்டுபிடிக்காவிட்டால் நம்மைப்போல் துரதிருஷ்டசாலி பரிதாபத்துக்குரியவர் வேறு யாரும் இல்லை.

## 1776) தன் மதமே உயர்ந்தது என்ற உண்மையைக் கண்டுபிடித்த புத்திசாலி

குருநாதர் கடலப்பரின் ஆசிரமத்திற்கு ஒரு விருந்தாளி வந்திருந்தார். விருந்தாளி கிணற்றுநாதர் தன் மரத்தைப் பற்றி விளக்கிக் கூறினார். நாங்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு மனிதர்கள் என்றார் கிணற்றுநாதர். கடல்நாதர் கேட்டார். நீங்கள் கூறுவதன் பொருள் என்ன?

கிணற்றுநாதர் பதில் சொன்னார். உலகில் உள்ள மக்கள் அனைவரிடம் இருந்தும் இறைவன் எங்களையே சிறப்புச் சீடர்களாக தேர்ந்தெடுத்துள்ளார். குருநாதர் கடல்நாதர் முகத்தைத் தொங்கப் போட்டபடி கூறினார். இந்த மகத்தான உண்மையைக் கண்டுபிடித்ததும் நீங்கள் தானே?

தங்கள் கருத்தையே உலகில் உள்ளோரும் பின்பற்றினால் மட்டுமே உலகம் பிழைக்கும் என்று நினைப்பது தான் அசுரர்களின் போக்கு என்பார் வினோபா.


## 1777) மதத்தைக் குறுக்காதீர்கள்

உலகின் மாமுனிவர்கள் மனிதர்கள் பறவைகளைப் போல சுதந்திரமாக இருக்க வேண்டும். மலர்களைப் போல மலர்ந்து இருக்கவேண்டும் என்றெல்லாம் கூறுவார்கள். குருநாதர் புஷ்பஹாசர் இக்கருத்தை அப்படியே பின்பற்றுபவர். அவருடைய ஆசிரமத்திற்கு அருகில் இருந்த பணக்காரர் குட்டை அப்பர் ஆசிரமத்திற்கு ஒரு கடிதம் எழுதினார். குருநாதரே உங்கள் ஆசிரமத்திற்குப் பறவைகள் தண்ணீர் குடிக்கும் அழகுக் குளம் ஒன்று கட்ட நான் நன்கொடை தந்தேன். அந்த அழகுக் குளத்தில் சிட்டுக் குருவிகளைத் தண்ணீர் குடிக்க அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதம் மாறியவர்கள் தான் இந்தக் கிணற்றில் தண்ணீர் எடுக்கலாம் என்று சொல்லுகின்ற பேர்வழிகள் இன்னும் இந்த உலகத்தில் இருக்கிறார்கள்.

**ஜே.பி. வாஸ்வானி கூறியது**

## 1778) நாமும் அதுபோல் தான்



குப்புசாமி முதல் தடவையாக ரயில் பயணம் செய்தான். அவன் பயணச் சுமை 50 கிலோ ஆகும். ரயில் விதியின்படி 40 கிலோ வரை கட்டணம் கிடையாது. மீதமுள்ள 10 கிலோவுக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். குப்புசாமி ஒரு தந்திரம் செய்தான். 40 கிலோ சாமானை ரயில்பெட்டியில் கீழே வைத்தான். மீதமுள்ள 10

கிலோ சுமையை தன் தலைமேல் வைத்துக் கொண்டான். 10 கிலோ சுமையை தலையில் வைத்துக் கொண்டு நீண்ட தூரம் பயணம் செய்தான். அப்போது பயணச்சீட்டு சோதனை செய்பவர் அந்தப் பெட்டிக்குள் நு ழை ந் தா ர். குப்புசாமியைப் பார்த்து ஏன் நீங்கள் சுமையை தலையில் வைத்துக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறீர்கள் என்று கேட்டார். குப்புசாமி ஐயா கட்டணம் இன்றி கொண்டு போகக்கூடிய 40 கிலோ சாமானை தரையில் வைத்தேன். மீதமுள்ள 10 கிலோவை நானே சுமந்து செல்கிறேன் என்றான். பரிசோதகருக்குச் சிரிப்பு வந்தது. உங்கள் சுமை முழுவதையும் இந்த ரயில் எந்திரம் தான் இழுத்துச் செல்கிறது. உங்கள் சாமானைத் தரையில் வைத்தாலும், தலைமேல் வைத்துக் கொண்டாலும், இச்சுமையை எல்லாம் சுமப்பது ரயில்வே எஞ்சின் தான். ஆகவே இந்த 10 கிலோ அதிகப்படி சாமானுக்கு நீங்கள் கட்டணம் செலுத்தித்தான் ஆகவேண்டும்.




இந்த முட்டாள் பயணியைப் போல் தான் நாமும் இருக்கிறோம். நம் சின்னஞ்சிறு வாழ்க்கைச் சுமைகளை நம் தலைமேல் வைத்து இருக்கிறோம். எல்லாச் சுமையையும் இறைவன் தான் தாங்கிக் கொள்கிறான் என்று அறிவது இல்லையே.

ஜே.பி. வாஸ்வானி கூறியது

## 1779) வாய்ப்பா பயமுறுத்தலா?


பெரிய வர்த்தக நிறுவனத்தின் விற்பனை மேலாளர் வீரப்பன் தன் நிறுவனத்தைப் பற்றி யோசித்துப் பார்த்தார். எந்தெந்த மாவட்டங்களில் விற்பனை குறைந்து இருக்கிறதோ அந்தந்த மாவட்ட விற்பனைப் பிரதிநிதிகளைக் கூப்பிட்டார். ஒரு மாநாடு நடத்தினார். மாநாட்டு மேடையில் சுவற்றில் ஒரு பெரிய வெள்ளைக் காகிதம் ஒட்டப்பட்டு இருந்தது. அதன் நடுவில் ஒரு கறுப்புப் புள்ளி வைக்கப்பட்டு இருந்தது. தன் விற்பனை பிரதிநிதிகள் ஒவ்வொருவராகக் கூப்பிட்டார் வீரப்பன். உங்கள் முன்னால் என்ன தெரிகிறது என்று கேட்டார். எல்லோரும் ஒரு கறுப்புப் புள்ளி தெரிகிறது என்று சொன்னார்கள். வீரப்பன் திரும்பத்திரும்பக் கேட்டார். வேறு

ஏதாவது தெரிகிறதா? எல்லோரும் கறுப்புப் புள்ளி மட்டும் தான் தெரிகிறது என்றார்கள். வீரப்பன் பதில் சொன்னார். நம்முடைய சோகக்கதையே இதுதான். நாம் எல்லோரும் கறுப்புப் புள்ளியை காண்கிறோம். இந்தக் கறுப்புப் புள்ளி எந்த வெள்ளைக் காகிதத்தில் வரையப்பட்டு இருக்கிறதோ அவ்வளவு பெரிய வெள்ளைக் காகிதத்தை நாம் பார்ப்பதே இல்லை. உங்கள் விற்பனை பகுதிக்குத் திரும்பச் செல்லுங்கள். கறுப்புப் புள்ளிகளைப் பார்க்காதீர்கள். வெள்ளைக் காகிதங்களைப் பாருங்கள். அச்சமூட்டும் ஆபத்துக்களைப் பார்க்காதீர்கள். லாபம் தரும் வாய்ப்புக்களைப் பாருங்கள் என்றார் வீரப்பன்.

**ஜே.பி. வாஸ்வானி கூறியது**

## 1780) வெற்றியின் ரகசியம்

வேட்டைக்காரன் வேலப்பன் தன் வலையில் ஒரு சின்னப் பறவையைப் பிடித்தான். அதைக் கூண்டில் அடைத்தான். கூண்டுப் பறவை திடீரென்று அவனிடம் பேசிற்று. வேட்டைக்காரனே! நான் ஒரு சிறிய பறவை. என்னால் உங்களுக்கு லாபம் கிடையாது. என்னைக் கொன்று தின்றால் உங்களுக்குச் சிறிதளவே மாமிசம் கிடைக்கும். என்னை நீங்கள் விடுதலை செய்யுங்கள். கூண்டைத் திறந்து என்னை வெளியே விடுங்கள். வெற்றியின் மூன்று ரகசியங்களை நான் உங்களுக்குச் சொல்லித் தருகிறேன். அந்த ரகசியங்களைக் கடைப்பிடித்தால் நீங்கள் செல்வமும், வளமும், வெற்றியும் கொண்டு விளங்குவீர்கள்.



திகைப்படைந்த வேலப்பன் கூண்டைத் திறந்து பறவையை வெளியே விட்டான். அப்பறவை பறந்து போய் ஒரு மரத்தின் உச்சியில் உட்கார்ந்து கொண்டது. தான் கூறியபடி மூன்று ரகசியங்களை அவனுக்குக் கற்பித்தது. முதல் ரகசியம் – உங்களுடைய பொது அறிவுக்கு விரோதமான எதையும் அவசரப்பட்டு ஏற்றுக் கொள்ளாதீர்கள். இரண்டாவது – இழந்த பொருளைப் பற்றி வருத்தப்படாதீர்கள். மூன்றாவது – செய்து முடிக்க இயலாத காரியத்தில் உங்கள் சக்தியை வீண் செய்யாதீர்கள். வேட்டைக்காரன் வேலப்பனுக்கு எரிச்சல் வந்தது. நீ ஒரு அற்பப் பறவை. உன்னை நான் கூண்டில் இருந்து வெளியில் விட்டிருக்கவே கூடாது. அதனால் ஒரு பயனும் கிடையாது.

பறவை பதிலுக்குச் சொன்னது. பயன் கிடையாதா? என் இதயத்தை வெட்டித் திறந்தால் அதில் மிகப்பெரிய வைரக்கல் ஒன்று பதித்திருப்பதை பார்க்கலாமே.

வேட்டைக்காரன் வேலப்பனை பேராசை பிடித்துக் கொண்டது. அவன் மரக்கிளைகளின் மீது ஏறினான். சிறு பறவையோ பறந்து போய் அடுத்த மரத்தின் மீது உட்கார்ந்தது. கிளைக்குக் கிளை தாவும் போது வேலப்பன் கீழே விழுந்து காலை முறித்துக் கொண்டான்.

அப்பறவை மரத்தின் உச்சியில் இருந்து கிரீச்சிட்டது. வெற்றியின் மூன்று ரகசியங்களைத் திரும்பச் சொல்கிறேன். உன் பொது அறிவுக்குப் பொருந்தாத எதையும் சோதித்துப் பார்க்காமல் நம்பாதே. எங்கேயாவது பறவையின் இதயத்தில் வைரக்கல் இருக்குமா? நீ என் முதல் விதியைக் கடைப்பிடிக்கவே இல்லை. அடுத்த விதி இழந்த பொருளைப் பற்றி வருத்தப்படாதே என்பது ஆகும். என்னைக் கூண்டில் இருந்து விடுவித்து விட்டு அதைப்பற்றி வருத்தப்பட்டாய். இது வீண் வேலை தானே?

மூன்றாவது விதி – செய்ய முடியாத வேலையைச் செய்ய முயற்சி பண்ணாதே. மரத்தில் இருக்கும் பறவையைப் பிடிக்க முயற்சி செய்தாய். கீழே விழுந்து காலை ஒடித்துக் கொண்டாய். எனக்கு நேரமாகி விட்டது. வருகிறேன். இனிமேலாவது நான் சொன்ன பாடங்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயற்சி பண்ணு.

## கலி – 5113 கர வருடம் தை மாத ஹிந்துப் பண்டிகைகள்

*2012 ஜனவரி 14 முதல் பிப்ரவரி 12 வரை*

**15.01.2012** – பொங்கல் பண்டிகை, **16 –** கனு மாட்டுப் பொங்கல், அரவிந்த ஆசிரம அன்னையார் பிறந்த நாள், ஸ்வாமி பிரம்மானந்தர் பிறந்த நாள், **22 –** தை அமாவாசை சமுத்திர ஸ்நானம், **23 –** நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் பிறந்த நாள், **25 –** தேசீய சுற்றுலா நாள், **26 –** குடியரசு தினம், **27 –** பன்னாட்டு ஹோலோகாஸ்ட் பேரழிவிற்கு இலக்கானோர் நிறைவு தினம், **28 –** லாலாலஜபத் ராய் பிறந்த நாள், **30** – ரதசப்தமி பீஷ்மர் வீடுபுகுந்த நாள், மகாத்மாகாந்தி நினைவுநாள், தியாகிகள் தினம், உலக தொழுநோய் ஒழிப்பு நாள்.

**02/02/2012 –** உலக சதுப்பு நில நாள், **4 –** வல்லபாச்சாரியார் பிறந்த நாள் / உலக புற்றுநோய் தினம், **07 –** தைப்பூசம் வெள்ளி மலை ஸ்ரீராமகிருஷ்ணர் திருக்கோவில் கும்பாபிஷேகம், குமரி மாவட்டம்.

# சங்கரன்கோவில் – அன்னபூஜை

## எழுதியவர் – ஜி. நாகசாமி

ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த புண்ணிய தினமான 21.08.2011 ஞாயிறு அன்று பஞ்ச ஸ்தலத்தில் ஒன்றாக இருக்கின்ற சங்கரநயினார் கோவிலில் உள்ள ரெட்டியார் திருமண மண்டபத்தில் வைத்து மிகச் சிறப்பாக அன்னபூஜை நடைபெற்றது. தியாகத்தினால் அமுதம் சுரக்கும் என்ற பழமொழிக்கேற்ப தியாகத்தின் பொருளை நன்கு உணர்ந்த மக்களிடம் இருந்து 3400 கிலோ அரிசி சேகரிக்கப்பட்டது. கேந்திரப் பணிகளுக்கு இனிமையூட்டுகின்ற வகையில் சுமார் 35 இளைஞர்கள் அரிசி சேகரிக்கும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இப்பணியினைச் செய்தனர்.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட அரிசியை மலைபோல் குவித்து அதில் அன்னபூர்ணா தேவியை அலங்காரத்துடன் ஆவாஹனம் செய்து அனைவருமாகச் சேர்ந்து ஆதிசங்கரர் அருளிய அன்னபூர்ணா ஸ்தோத்திரம் மற்றும் பகவத்கீதையில் உள்ள விஸ்வரூப தரிசனம் முதலிவற்றை பக்திப் பூர்வமாக ஓதினர். அதன் பின்னர் நைவேத்திய மந்திரத்திற்குப் பின் திருமதி கலாராணி மற்றும் திருமதி வெள்ளிமாலை ஆகியோர் ஆரத்தி எடுத்தனர். முன்னதாக இந்நிகழ்ச்சியை திருமதி மகாதேவி அவர்கள் திருவிளக்கேற்றித் துவக்கி வைத்தார்கள். இதில் 120 பேர் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்ச்சியில் திரு. வேல்முருகன் ஆசிரியர் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். திரு. ராம்சன் திரு. ஆர். முத்துக் கிருஷ்ணன் அவர்கள், காயத்ரீ டெக்ஸ் திரு. ஏ.வி. ரவி அவர்கள், வழக்கறிஞர் திரு. சண்முகையா அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கேந்திரத்தின் மூத்த சகோதரர் ந. கிருஷ்ணமூர்த்திஜி மற்றும் கேந்திர கிராம முன்னேற்றத் திட்டச் செயலர் திரு. அய்யப்பன்ஜி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

விவேகானந்தர் படக்கண்காட்சியும், சுவாமிஜியின் வாழ்க்கை பற்றிய குறுந்தகடு ஒளி, ஒலிக் காட்சியும் சிறப்பாக திரு. ஆப்டெக் சேகர் அவர்கள் செய்திருந்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு கேந்திரத்தின் சார்பாக நினைவுப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. கேந்திரத் தொண்டர் திரு. ஆப்டெக் சேகர் அவர்களின் நன்றியுரைக்குப் பின்னர் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. கோவில்பட்டி கிளைத் தொண்டர்கள் மற்றும் பாலர்பள்ளி ஆசிரியைகள் சித்ராதேவி, கலாஜோதி, மகேஸ்வரி, ஜெயசீலா, சரஸ்வதி ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். அனைவருக்கும் அன்னபூஜை பிரசாதம் வழங்கப்பட்டது.

# இல்லத்தை இனிதாக்குவது எது?

**ஆசா ரெட்டி**

அரவிந்தனுக்கு அலுவலகத்தில் நாள் முழுதும் கடினமான வேலை. வெப்பம் வேறு, ஆளைக் கெளுத்திற்று. காலையில் அவன் வேலையை ஆரம்பித்ததில் இருந்தே ஒன்றுமே சரியாக அமையவில்லை. சின்னச்சின்ன விஷயங்களில் சகப்பணியாளர்களுடன் பூசல் கிளம்பிற்று. சில முக்கியமான கோப்புக்களை அவனால் தேடி உரிய நேரத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை. தலைவேறு அவனுக்கு வலிக்கத் தொடங்கியது. எப்போது இந்த நாள் முடியும் என்றிருந்தது அவனுக்கு.



ஏனெனில் நாளின் முடிவில் அவன் தன் இனிய இல்லத்திற்குப் போவதை ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தான் – தன் இனிய இல்லத்திற்கு

திவ்யாவுக்கு எப்போதும் பள்ளிக்கூடம் போவது ஒரு சுவையான அனுபவம். ஆனால் இன்றைய தினம் ஒரு விதிவிலக்கு. அவள் செய்யாத குற்றத்திற்கு ஆசிரியர் அவளைக் கண்டித்தார். அவளுடைய உயிர்த்தோழி அவளுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை. அவளுக்கு எரிச்சலாக இருந்தது. துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது. கடைசி மணியும் அடித்தபோது அவளுக்கு 'அப்பாடா' என்றிருந்தது. பெருமூச்சுடன் அவள் தன் புத்தகப் பையில் நோட்டுப் புத்தகங்களை அடைத்துக் கொண்டாள். நிம்மதியும் எதிர்நோக்க அவளுக்கு இருந்தது – இல்லம் – இனியதோர் இல்லம்.

இல்லத்தை இனிய இல்லமாக ஆக்குவது எது? அழகிய கட்டிடமா, தோட்டமா? நல்ல நல்ல மேசை, நாற்காலி, சோபா செட்டா? சமையலறை மின் கருவிகளா? குளிர் சாதனப் பெட்டியா, மின் அடுப்பா, பிரஷர் குக்கரா? இல்லை – மனிதர்கள் தான் இல்லத்தை இனிமையாக்குகிறார்கள். இல்லத்தின் குளுமை, நெருக்கம், அன்னியோன்னியம், மகிழ்ச்சி இவற்றைப் பகிர்ந்து கொள்வதால் இல்லத்தின் ஆனந்தமும், இனிமையும் வருகின்றன. ஆனால் இத்தகைய ஒற்றுமை உள்ளிசைவு தானே வந்து விடுமா என்ன? (வராது) அதற்கென முயற்சி

செய்ய வேண்டும். ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும். பொதுவான ஈடுபாடுகளை, பிறர்பால் இரக்கத்தை, இன்பங்களை, பகிர்ந்து கொள்கின்ற மனப்பாங்கு வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறினால் ஒருவித நற்பண்பினைப் பின்பற்றுவது தேவை.

புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் ஏ.ஜே. க்ரோனின் கூறுகிறார். பலப்பல ''நூற்றாண்டுகளாக குடும்ப அமைப்பானது, மனிதகுலத்தின் நற்குணங்களைக் காத்து வளர்ப்பதிலும், பண்பாட்டினை வளர்த்து உருவாக்குவதிலும் முதல் பொறுப்பினை வகித்து வருகிறது. எங்கெல்லாம் குடும்ப அமைப்பு வீரியத்துடனும், ஒற்றுமையுடனும் செழித்துத் திகழ்கின்றதோ அங்கெல்லாம் நாம் வலுவுள்ள சமுதாயத்தை, ஆரோக்கியமான சமுதாயத்தைக் காணலாம். இது பயமும், நிம்மதியின்மையும் இல்லாத காலம். நம்மைச் சுற்றி எதிரிப் படைகளால் சூழப்பட்ட மக்கள், தனியே இருப்பதாகவும், இருண்ட இடத்தில் இருப்பதாகவும், ஒதுக்கித் தள்ளப்பட்டு இருப்பதாகவும் உணர்கின்றனர். இக்காலக்கட்டத்தில் அவர்கள் தம்மைக் காத்துக் கொள்வதும் நம்பிக்கை அளிப்பதும் குடும்ப அமைப்பே. மானுட கண்ணியத்தையும் வாழ்வின் நாகரீகத்தையும் காக்க வைக்க, குடும்ப அமைப்பே நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறது.

ஒரு குடும்பம் போற்ற வேண்டிய மிக முக்கியமான நற்குணமாக, ஒளிவு மறைவில்லாத நேர்மையை நாம் குறிப்பிடலாம். அது இல்லாமல் ஒரு குடும்பத்தை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாது. ஒரு சமுதாயத்தில் நாம் வாழ்வதை நம்மால் நினைத்தும் பார்க்க முடியாது. எளிமையாகச் சொன்னால் நேர்மை என்பது, நாம் உண்மையென்று கருதுவதையே சொல்வது, நாம் செல்வதையே உண்மை என்று கருதுவர். நாம் ஒருவரை ஒருவர் ஏமாற்றாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருப்பது. அதன் உட்பொருள் என்ன? நாம் எதனிடத்தும் கொண்டிருக்கும் பாச அன்பு மனப்பூர்வமானது. எதையும் நாம் புகழ்ந்து நேர்மையானது. இக்குணத்தை, சிறு குழந்தைப் பருவத்திலேயே நாம் அவர்களுக்குள் நிலைநிறுத்தி விடவேணடும். இதனை நம்மால் கற்பிக்க முடியாது. காட்டிக் கெடுக்கத்தான் முடியும். ஒளிவு மறைவற்ற நேர்மையை நாம் வாழும் விதத்தின் மூலம் தான் கற்பிக்கிறோம். ஒரு ஆசிரியர், ஒரு மாணவன் பொய் சொல்வதாகக் குற்றம் சாட்டினார். அப்பையன் பெருமையுடன் பதிலுரைத்தார் ''எங்கள் வீட்டில் யாரும் பொய் சொல்லமாட்டோம்.'' நேர்மை தரும் பலத்தினால் நாம் வாழ்வில் தலைநிமிர்ந்து நடக்க முடியும். குழந்தைகள் பெற்றோர்களை நகலடிப்பவர்கள். அவர்கள் இயல்பாகவே, பெற்றோர் செய்வது போல் தானும் செய்வர். இது பெற்றோர்கள் மீது பெரும் சுமையைப் போடுகிறது. பெற்றோர்கள் குழந்தைகள் என்னென்ன நற்குணங்களைப் பின்பற்ற வேண்டும் என்று நினைக்கிறார்களோ அவற்றின்படி அவர்களும் நடந்து கொள்ள வேண்டும். நடக்கும் போதும், பேசும் போதும் அவர்களே குழந்தைக்கு முன் உதாரணங்களாக விளங்குகின்றனர். பல சமயங்களில் பெற்றோர்கள் குழந்தைகளிடம் 'பொய் சொல்லாதே' என்று கூறிவிட்டு உடனே வாசலில்

வந்திருப்பவர்களிடம் 'அப்பா வீட்டில் இல்லை' என்று கூறும்படி செய்கிறார்கள். குழந்தைகள் குழப்பம்தான் அடைகின்றார்கள். ''வீட்டில் தான் இல்லை என்று அப்பா உங்களிடம் கூறும்படி என்னிடம் சொன்னார்கள்'' என்று ஒரு குழந்தை சொல்வது நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவம் தானே.

இந்த வாழ்க்கையில் மலைகளையே புரட்டிப் போட்டு கனவுகளை நனவாக்கும் உண்மையான மாயாஜாலம் ஒன்றே ஒன்று தான் உண்டு. அந்த மாயவேலை தன்னையே நம்புவதுதான். தம்மையே நம்புபவர்கள், சவால்களைச் சந்திக்க தமக்கு சக்தி உண்டு என்று நம்புபவர்கள் மட்டுமே வாழ்க்கையை தைரியமாக எதிர்கொள்ள இயலும். தன்னை நம்பும் எவரும் எதையுமே சாதித்து விடலாம்.

சில மாதங்கட்கு முன்பு ஆஸ்திரிய நாட்டு டென்னிஸ் விளையாட்டு வீரர் தாமஸ்மஸ்டர் பிரெஞ்சு நாட்டுப் பொது விளையாட்டுப் பட்டத்தை வென்றார். இந்த ஆண்டின் களிமண் விளையாட்டரங்க வீரர்களுள் தலைசிறந்தவராகவும் அவர் விரும்பினார். ஆனால் அவர் ஒரு பெரும் விபத்தில் சிக்கிக் கொண்டு விட்டார். மருத்துவர்கள் அவரால் நடக்கவே முடியாது என்று கருத்துத் தெரிவித்தார்கள். டென்னிஸ் விளையாடுவது என்ற பேச்சே எழவில்லை. ஆனால் அவரோ நெஞ்சுரம், மனஉடல் உறுதி, சுயமுயற்சி இவற்றின்மூலம் அவர் தன் துறையின் முதல் இடத்திற்கே திரும்ப எழும்பிச் சென்றார். சுவாமி விவேகானந்தரின் சொற்களில் கூறுவதென்றால் தெய்வத்தை நம்பாதவன் நாத்திகன் என்று பழைய மதங்கள் கூறின. தன்னையே நம்பாதவன்தான் நாத்திகன் என்று புதிய வேதங்கள் புகல்கின்றன.

ஒரு குழந்தையிடம் சுய சார்பினை ஊக்குவிக்க பெற்றோரால் ஏதாவது செய்ய முடியுமா? முடியும். குழந்தையின் இயல்பான திறமைகளும், கைத்திறனும் எங்கே பொதிந்திருக்கின்றன என்று பார்த்து, அவற்றை பலவந்தமின்றி வளர்த்தெடுப்பதில் தான் இதன் ரகசியம் ஒளிந்து கிடக்கிறது. குழந்தையின் திட்டங்களையும், ஆசை விருப்பங்களையும் அது கூறும்போது, நாம் கவனத்துடனும், மரியாதையுடனும் அவற்றைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும். அவை எவ்வளவு எளிமையாகத் தோன்றினாலும் முடிந்த போதெல்லாம் அவை நனவாக, குழந்தைக்கு நாம் உதவி செய்ய வேண்டும்.

## மா. ஏக்நாத்ஜி நினைவு நாள்

நெல்லை மாவட்டம் வாசுதேவ நல்லூர், மாதொரு பாதியன் அர்த்த நாரீஸ்வரர் ஆலயம் திருமேனிச் சிறப்பும் கோவில் அழகும் கொண்டது ஆகும். இங்கு நடந்த ஒன்றிய அளவிலான கிராமப்புற பண்பாட்டுப் போட்டியின் போது மக்கள் கோவில் அறங்காவலரும், கேந்திர அன்பரும் ஆகிய திரு. சிவஞானம் தலைமையில் மா. ஏக்நாத்ஜி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். பண்பாட்டுப் போட்டியும் அழகாக நடைபெற்றது. ஏற்பாடும், தகவலும் ஜி. நாகசாமி


# சத்தியமும் தானமும்

## வி. ராமநாதன்

நம் ஹிந்து தத்துவத்தில் சத்தியமும் தானமும் கட்டளைகள் அல்ல. ஆனால் சில அடிப்படைகளை இந்தப் புனித நாட்டில் கங்கை, யமுனை, காவேரி நாட்டில் பிறந்த நாம் பின்பற்றி ஒழுகுகின்றோம். முதலாவதும் அதிமுக்கியமானதும் **சத்தியத்தைப் பின்பற்றி நடத்தல்**. ஸத்யமேவஜயதே சத்தியமே வெல்லும், என்பதே நம் தேசீய லட்சிய வாசகம். இதுவே, நிர்வாகத்திலும் தனிநபர் வாழ்விலும், பிறருடன் பழகுவதிலும் நம்மை வழிநடத்தும் தத்துவம் ஆகும். சத்தியம் பேசு (சத்யம் வத) என்ற தைத்திரீய உபநிஷத வாக்கு நல்வாழ்வுக்கு வழிகாட்டி ஆகும்.

பேரழிவுக் காலத்திலும் சத்தியத்தைப் பின்பற்றி வாழ்வதற்கு முதன்மையான உதாரணம் ராஜா ஹரிச்சந்திரனின் கதை. விண்ணுலகத் தேவர்கள் நம் திறமைகளைச் சோதித்துப் பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை உண்டு பண்ணுகின்றார்கள். சத்திய, தர்மப் பாதையில் இருந்து நாம் பிறழ்ந்து விட ஆசை காட்டுகின்றார்கள். தன் கொள்கைகளில் துருவ நட்சத்திரத்தைப் போல அசையாமல் நிற்பவன்தான் உண்மை மனிதன். பிறருக்கு முன்மாதிரி போற்றத்தக்கவன் அவனே. ஹரிச்சந்திரன் இப்படிப்பட்டவனே.

நம்மில் பலருக்கு அவன் கதை தெரிந்திருக்கும். இருப்பினும் சுருக்கமாகச் சொல்லுவோம் இன்னொரு முறை. மன்னன் ஹரிச்சந்திரன் நாட்டையும், மக்களையும் அறநெறிப்படி சத்தியம் தவறாமல் ஆண்டு வந்தான். அவனுடைய நாட்டில் வறுமை கிடையாது. குடிமக்கள்



மகிழ்ச்சியுடனும், திருப்தியுடனும் வாழ்ந்து வந்தனர். அவனுடைய ராஜகுரு வசிஷ்டர் நிர்வாக விஷயங்களிலும், ஆன்மீக விஷயங்களிலும் அவனுக்கு அறிவுரை கூறிவந்தார்.

விசுவாமித்திரர் க்ஷத்திரிய குலத்தில் பிறந்ததால் அவருக்கு பிரம்மரிஷி என்ற பட்டம் கிட்டவில்லை. அவர் பிரம்மரிஷி என்று புகழ்பெற்ற வசிஷ்டரைப் பார்த்ததில் பொறாமை கொண்டார். பல தடவைகள் விசுவாமித்திரரும், வசிஷ்டரும் எதிர்எதிர் அணிகளில் நின்றனர். ஒரு உதாரணம். திரிசங்குவுக்கென விசுவாமித்திரர் புதிய சுவர்க்கலோகம் படைத்தல், திரிசங்குவின் ராஜகுரு வசிஷ்டர் இவ்விரண்டு அறிவாளிகளின் பூசல் நீண்டகாலம் தொடர்ந்து நீடித்தது. வசிஷ்டரே தன் வாயால் விசுவாமித்திரரை பிரம்மரிஷி என்றழைத்தபின் தான் இந்தப் பிணக்கு தீர்ந்தது.

ராஜா ஹரிச்சந்திரன் ஒரு பொய் கூடச் சொன்னதில்லை என்பதில் ராஜகுரு வசிஷ்டருக்குப் பெருமிதம் உண்டு. இச்சவாலை ஏற்றுக் கொண்டு விசுவாமித்திரர் ஹரிச்சந்திரனைப் பரிசோதிக்க ஆசைப்பட்டார். மன்னர் ஹரிச்சந்திரனிடம் விசுவாமித்திரர் ஒரு பரிசு கேட்டார். வாக்குறுதி தந்த ராஜா, தன் நாட்டையே கொடுக்க வேண்டி வந்தது. அம்முனிவர் மன்னனின் பாதையில் இன்னும் இடைஞ்சல்களை உண்டாக்கி, மன்னனையும், ராணியையும் அவர்கள் புதல்வனையும் தன் அடிமைகள் ஆக்கிக் கொண்டார். இத்துன்பங்ளையும், அவமானங்களையும் ஹரிச்சந்திரன் தாங்கிக் கொண்டார். தன் ஆண்மைக்கும், உயிருக்கும், வாழ்க்கைக்கும் ஏற்பட்ட அவமானங்களை அவன் தாங்கிக் கொண்டான். ஆனாலும் சத்தியம் தவறாமல் நின்றான். கோபமுற்ற முனிவர், வாராணசி மயானத்தில் ஹரிச்சந்திரன் ஒரு கூலியாளாக வேலை செய்யும்படி நியமித்தார். ஹரிச்சந்திரன் தன் பணியைக் கண்ணும் கருத்துமாக ஆற்றினான். மயானத்தில் எரியூட்டப்பட்ட பிணங்களின் கணக்கை வைத்திருந்து, முனிவருக்குச் சேரவேண்டிய தொகையை வசூலித்துக் கொடுத்து வந்தான்.

தர்மப்பாதையில் மன்னன் தவறின்றி நடப்பதைக் கண்ட முனிவர், அவன் மனைவியையும், மகனையும் ஒரு பணக்கார வியாபாரிக்கு விலைபேசி, கோபத்தில் விற்று விட்டார். அவ்விருவரும் வீட்டு வேலை செய்து பிழைத்தனர். இவற்றில் எல்லாம் முனிவர் திருப்தி அடையவில்லை. சினத்தினால் அவர், மன்னனின் மகனை ஒரு விஷப்பாம்பு கடிக்கச் செய்தார். பிணத்தைப் புதைக்க மன்னனின் மனைவி மயானத்துக்குப் போனாள். ராஜாவுக்கும், ராணிக்கும் ஒருவரை ஒருவர் அடையாளம் தெரியவில்லை. பிணத்தைப் புதைக்குமுன் முனிவருக்குக் கொடுக்க வேண்டிய கட்டணத்தைத் தரவேண்டும் என்று மயானச் சேவகன் வற்புறுத்தினான். அப்பெண்ணிடம் பணம் இல்லை. தான் ஏழை என்பதால் கட்டணத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அப்பெண் கேட்டுக் கொண்டாள். மறுத்துவிட்ட ஹரிச்சந்திரன் பிணத்தை எடுத்துக் கொண்டு போய்விடும்படி அப்பெண்ணிடம் கூறிவிட்டான். தன் ஆண்டானுக்குச் செலுத்தவேண்டிய கட்டணத்தைக் கட்டினால் தான் பிணத்தைப் புதைக்கலாம் என்று சொன்னான் அவன். ராஜா ஹரிச்சந்திரனின் சத்தியநெறியை விண்ணில் இருந்து கண்ட தேவர்கள் புனித காசிக்கு வந்து ராஜா, ராணியை வாழ்த்தினார். விசுவாமித்திர முனிவர் தன் தோல்வியை ஒப்புக் கொண்டார். ராஜா ஹரிச்சந்திரனை சத்தியத்தின் மறுபெயர் இவ்வுலகில் என்று போற்றினார்.

நாம் அனைவரும் இந்தக் கதையைப் படித்திருக்கிறோம், கேட்டிருக்கிறோம். ஆனால் சத்தியத்தைப் பற்றி நிற்பதற்காக எத்தனைபேர், உலக சுகங்களைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறோம்? விதி பேரழிவுகளை நம்மீது குவிக்கும் போது, சத்தியத்தின் நேர்ப்பாதையில் இருந்து நாம் பிறழ்ந்து விடுகிறோம். அறம் தவறுகிறோம். நெருக்கடி நிலையின் தற்காலிக சாந்திக்காக சின்னச்சின்ன பொய்களைச் சொல்லவும் நம்மை நாமே வற்புறுத்திக் கொள்கிறோம். சிறுவயதில் நாம் கூறும் சிறுசிறு பொய்கள் நமக்கு வயதானாலும் பெரிய பொய்களைச் சொல்ல நம்மை நிர்ப்பந்தம் செய்கின்றன. ஆகவே இளம் மாணவர்கள் சிறிய விஷயங்களில் கூட பொய்சொல்லும் போக்கைத் தவிர்க்க வேண்டும். சத்திய தர்மப்பாதையில் உறுதியுடன் நிற்கப் பழகவேண்டும். சத்தியத்தைப் பற்றி நிற்பது வாழ்வில் மகிழ்ச்சி தரும். இறுதியில் நம் சுய கௌரவத்தை உயர்த்தும். வாழ்க்கையில் எதிர்ப்புக்களை எதிர்கொள்ளும் தன்னம்பிக்கைகளைக் கொண்டு வரும்.

நம் உபநிஷதங்களில் கூறப்பட்டுள்ளது. ‘‘ஏதத் வை முகதோன்னகும் ராத்தம் முகதோஸ்மா அன்னகும் ராத்யதே’’ - அதாவது விதைத்தது எதுவோஅதுவே அறுவடை ஆகும். இத்தகைய பரிபூரண சத்தியங்கட்குக் கூட விதிவிலக்குகள் உண்டு. அவையே சத்தியத்தை நிரூபிக்கின்றன. விஷ்ணுவை நிந்தனை செய்யும் ஹிரண்யகசிபுவுக்கு பிரஹலாதன் மகனாகப் பிறந்தான். தாயின் கருவிலேயே பிரஹலாதன் நாரத முனிவரின் உபதேசங்களைக் கேட்டான். தெய்வீகக் குணங்கள் அவனுக்கு உண்டாயின. நம் முனிவர்கள் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே கூறினார்கள். இருபத்தி ஓராம் ஆண்டு துவக்கத்தில் தான் மேற்கத்தைய விஞ்ஞானிகள், கருவில் இருக்கும் குழந்தையின் அறிவுத்திறன், சூழலுக்கேற்ப அக்குழந்தை வளர்தல் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டனர். ஆகவே கர்ப்பிணி மகளிர் நல்ல சொற்களைக் கேட்க வேண்டும், ஆரோக்கியமான, ஆனந்தமான வாழ்க்கை நெறிகளைப் பின்பற்ற வேண்டும்.

ஹிரண்ய கசிபுவுக்குப் பிறந்த பிரஹலாதன் விஷ்ணுவின் பரமபக்தன் ஆனான். பரமபாகவதர்களைப் பற்றிப் பேசும்போது நாம் முதலில் பிரஹலாதன் பெயரையே சொல்கிறோம். பிரஹலாத நாரத, பராசர, புண்டலீக, வியாச, அம்பரீஷ, சுக, சௌனக, விபீஷணன், தால்ப்ய, ருக்மாங்கத, அர்ஜுன, வசிஷ்ட விபீஷண என்று போகிறது அந்த வரிசை. குருநாரதரின் பெயர்கூட பிரஹலாதன் பெயருக்கு அப்புறம் தான் வருகிறது. (தொடரும்)

**கேந்திரச் செய்தி**

குமரி மாவட்டம் மங்காவிளை, கண்ணம்பிவிளை, நங்கூரன் பிலாவிளை, கல்லவீரியன்விளை, வல்லக்குமாரன்விளை பெற்றோர் கூட்டங்களை அழகுற நடத்தி பெற்றோர்களுக்கும், பாலர்பள்ளிக்கும், கேந்திரத்திற்கும் உள்ள உறவுகளை வலுப்படுத்தினர்.

# கேந்திர நிறுவனர் மா. ஏக்நாத்ஜியின் புனித வாழ்க்கை வரலாறு

## ஏக்நாத்ஜி

ஆங்கிலம்: நிவேதிதா ரகுநாத் பிடே
தமிழ்: பொ. தங்கசுவாமி

**திரு. பாலாசாஹெப் தேவ்ரஸ் – சர்சங்க சாலக், ராஷ்டிரீய ஸ்வயம் சேவக் சங்கம்**

இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு என்னுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது மிகவும் கடினம். இதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். சரியாக உணர்ந்து கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். ஏக்நாத்ஜி ரானடே என்னுடைய பால்ய நண்பர் என்பது உங்களில் ஒரு சிலருக்குத் தெரிந்திருக்கலாம். நாங்கள் ஒருவருக்கொருவரை 1926–லிருந்து அறிவோம். கழிந்த 55 ஆண்டுகளாக நாங்கள் நண்பர்கள் என்பதே இதன் பொருள். நிச்சயமாக, இதற்குக் காரணம் ஆர்.எஸ்.எஸ். உண்மையில் நாங்கள் ஒரே ஆர்.எஸ்.எஸ் கிளைக்குச் சென்று கொண்டிருந்தோம். நாங்கள் ஒரே கண அல்லது பதக்–இன் உறுப்பினர்கள். நாங்கள் இருவரும் ஒரே பள்ளியில் பயின்று வந்தோம். எனவே தினந்தோறும் அவர் எங்கள் வீட்டிற்கு வருவார் அல்லது நான் அவர் வீட்டிற்குச் செல்வேன். என்னுடைய தாய், தந்தை, என்னுடைய சகோதரர்கள் அவர்களுடைய மனைவியர். என்னுடைய சகோதரிகள் அனைவரும் ஏக்நாத்ஜியை நன்கு அறிவர். நாங்கள் சிறுவர்களாக இருக்கும்போதே அதாவது உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லும் முன்பே அதிர்ஷ்டவசமாக ஆர்.எஸ்.எஸ்–ன் ஸ்தாபகர் டாக்டர் ஹெட்கேவாரின் தொடர்பில் வந்தோம். அங்கும் நாங்கள் இருவரும் டாக்டர் ஹெட்கேவாரின் காலடியில் அமர்ந்து பாடங்களைக் கற்கும் வாய்ப்பைப் பெற்றோம். டாக்டர் ஹெட்கேவார்



SHRI EKNATHJIRANADE
1914-1982

எங்களுக்கு அடிக்கடி வித்தியாசமான பொறுப்புக்களைக் கொடுப்பது வழக்கம். நாங்கள் அவற்றை எவ்வாறு செய்கிறோம் என்பதை கவனிப்பார். நாங்கள் நல்ல தொண்டர்களாக உருவாக, வழிகாட்டுவார். எங்களுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டுவார். நாங்கள் நல்ல மாணவர்களாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். ஏக்நாத்ஜியும் ஒரு மிக நல்ல மாணவர். நானும் ஒரு நல்ல மாணவனாகத் திகழ்ந்தேன். ஆனால் எங்களுடைய இளமைப்பருவத்திலேயே எங்கள் இருவரையும் மற்றும் சிலரையும் ஆர்.எஸ்.எஸ்–இன் முழுநேர ஊழியர்களாக டாக்டர் ஹெட்கேவார் அடையாளமிட்டு வைத்திருந்தார். நான் சட்டக் கல்வியிலும், ஏக்நாத்ஜி எம்.ஏ–யிலும் வெற்றி பெற்றதும் நாங்கள் இருவரும் பிரச்சாரக்கர்களாக ஆனோம்.

நாங்கள் வெவ்வேறான மாநிலங்களில் பணி செய்தோம். இருப்பினும் நாங்கள் சந்தித்துக் கொள்ள அடிக்கடி சந்தர்ப்பங்கள் கிடைத்தன. எங்களுடைய அதே நெருங்கிய நட்பு தொடர்ந்தது. எனவே ஏக்நாத்ஜியின் இயல்புகளை, குணநலன்களை முழுக்க முழுக்கத் தெரிந்தவர்களில் நானும் ஒருவன். அவர் அறிவுக் கூர்மையானவர் மட்டுமல்ல. மிகவும் கடுமையாக உழைப்பவர் என்பதை நான் அறிவேன். நாங்கள் பிரச்சாரக் பணிக்குச் செல்லவேண்டும் என்று டாக்டர் ஹெட்கேவார் முடிவு செய்தபோது, நாங்கள் பேச்சாற்றலை வளர்த்துக் கொள்வதற்காக எங்களுக்காக ஒரு பட்டிமன்றத்தை ஆரம்பித்தார். நான் ஏதாவது ஒரு பொருள் பற்றி பேசச் செல்லும்போது முன்கூட்டியே தயார் செய்வதில்லை. ஆனால் அவருடைய விஷயமே வேறு. அவருடைய தோழர்கள் அவருடைய இந்தச் சிறப்புத்தன்மையை உணர்ந்திருக்க வேண்டும். திரும்பத்திரும்ப எழுதுவார். பின்பு மனப்பாடம் செய்வார். இவ்வாறு நாங்கள் கல்லூரியில் படிக்கும்போது அவர் பேசும் வல்லமையை வளர்த்துக்கொண்டார். இதேபோல் ஒரு முழுமையான தொண்டராக ஆவதற்கு தன்னால் முடிந்தவரை முயன்றார்.

ஒருசமயம் அவர் மத்திய பாரத் பொறுப்பாளராக ஆக்கப்பட்டார். எப்போதாவது வங்காளத்திற்கும் செல்வார். அந்த மாநிலங்களில் எல்லாம் திறமை வாய்ந்த பிரச்சாரக்காக வெற்றி வீரராகத் திகழ்ந்தார். அவர் மிகுந்த உடல் வலிமை வாய்ந்த தைரியசாலி என்பதை உங்களில் பலர் அறியாமல் இருக்கலாம். கஷ்டங்களை மிகுந்த தைரியத்துடன் எதிர்கொள்வது அவரது வழக்கம். ஒரு தடவை சங்கஸ்தானில் ஒரு பாம்பை அச்சமின்றி காலினால் மிதித்து துவம்சம் செய்தார். இப்போது நான் ஏக்நாத்ஜியை எனது பால்ய நண்பராக, என்னுடைய ஆர்.எஸ்.எஸ். தோழராக நினைவு கூறும்போது பல விவரங்களை ஞாபகப்படுத்திக் கொள்ள முடிகிறது. ஆனால் அவர் இப்போது நம்மோடு இல்லை என்பதைக் காணும்போது இயல்பாக நான் உணரும் வேதனையை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

விவேகானந்தர் பாறை நினைவாலயப் பணி தொடங்கப்பட்ட போது, அது தொடர்பான பிரச்சினைகள் எழுந்தபோது, ஸ்ரீகுருஜி ஏக்நாத்ஜியைத் தான் தேர்ந்தெடுத்தார். ஏனென்றால் அவர்தான் நிகழ்கால, வருங்கால பிரச்சினைகளை எதிர்கொள்ளவல்ல சரியான நபர் என்பதை ஸ்ரீகுருஜி

அறிந்திருந்தார். ஸ்ரீகுருஜியின் தீர்ப்பு சரியானது என்பதை காலம் நிரூபித்து விட்டது. ஸ்ரீ ஏக்நாத்ஜி மிகக்குறுகிய காலத்திற்குள் நாட்டின் மிக வல்லமை பொருந்திய ஸ்தாபனங்களுள் ஒன்றை விவேகானந்த கேந்திரம் என்ற பெயரில் உருவாக்கியுள்ளார். நான் நினைக்கிறேன். விவேகானந்தர் நினைவாலயம் இந்தப் பாறையில் நிலைகொண்டிருக்கும்வரை ஏக்நாத்ஜியின் பெயரையும் மறக்க இயலாது. எந்த ஒரு பணியைச் செய்து முடித்ததும் இதுபோதும் என்று திருப்தியடையும் இயல்பைக் கொண்டவர் அல்ல அவர். அவர் எப்போதும் புதுக் கருத்துக்களை முன் வைப்பார். எங்களை அவருடைய கருத்துக்கு இசைய வைக்கும் சாமர்த்தியம் அவரிடமிருந்தது. அவருடைய மனதில் இருக்கும் திட்டத்திற்கு, பொதுவாக நாங்கள் சம்மதிக்குமாறு பார்த்துக் கொள்வார்.

ஆனால் என்ன இருந்தாலும் எதற்கும் ஓர் எல்லை உண்டு. வருடக்கணக்கான கடுமையான உழைப்பு அவருடைய ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவித்தது. சில வருடங்களுக்கு முன்பு அவருக்குக் கடுமையான இரத்த அழுத்த நோய் ஏற்பட்டது. அதிலிருந்து மீண்டதும், அவர் முன்புபோல் தகுந்த உடல்நலத்துடன் இல்லை. மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அதிக சுற்றுப்பயணம் கூடாது என்று என்னால் இயன்றவரை விளக்கிக் கூறினேன். ஆனால் அதையெல்லாம் அவர் கேட்கப் போவதில்லை. அது அவருடைய இயல்பு அல்ல. அவர் அநேகமாக, பணியாற்றிக் கொண்டிருக்கும்போது இறந்து போக விரும்பினார் போலும். அவர் அவருடைய சுற்றுப்பயணத்தை 18-ம் தேதி முடித்துக் கொண்டார். சுற்றுப் பயணத்திலிருந்து திரும்பி வந்த ஒரு வாரத்திற்குள் இந்த உலகத்தை விட்டுச் சென்று விட்டார். அவர் நம்மோடு இல்லை. ஆனால் அவர் ஒரு பிரம்மாண்டமான பணியைத் தொடங்கியுள்ளார். நாம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் பல உள்ளன. எதிர்காலத்தில் மேலும் பிரச்சினைகள் வர இருக்கின்றன. ஆனால் அவர் ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்துள்ளார். அவரோடு பணி செய்துள்ள இந்தக்குழு அவர் பணியாற்றிய பாங்கை, பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த மாண்பைப் பார்த்துள்ளது என்று நான் நினைக்கிறேன். எனவே இந்தக்குழு அதே அர்ப்பண பாவத்துடனும், பக்தியுடனும், பணியாற்றும். ஏக்நாத்ஜியின் இழப்பினால் பணி பாதிப்படையாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அதுவே ஒரு உண்மையான கருமயோகிக்குச் செய்யப்படும் மிகச்சரியான மரியாதை. என்னுடைய வாழ்நாள் நண்பர். ஆர்.எஸ்.எஸ்.-இல் எனது தோழர், நாட்டிற்கு மிகமிகத் தேவையான விவேகானந்த கேந்திரத்தில் பணியாற்றி வந்த அவர் இப்போது நம்மைவிட்டுச் சென்று விட்டார். அவர் இறப்பு விவேகானந்த கேந்திரத்திற்கு மட்டும் இழப்பு அல்ல. ஒட்டு மொத்த நாட்டிற்குமே இழப்பு. எவ்வாறாயினும், நாம் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். எதிர்காலத்தை உற்றுநோக்க வேண்டும். அவருடைய பணியைத் தொடர்ந்திட நமது முழுத்திறமையையும் அதே உத்வேகத்துடன் ஈடுபடுத்த வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் அவருடைய பிரிந்த ஆன்மாவிற்கு நான் அஞ்சலி செலுத்துகிறேன்.

**திரு.அ. பாலகிருஷ்ணன், பொதுச் செயலாளர், விவேகானந்த கேந்திரம்**

விவேகானந்த கேந்திரத்திற்கு இது ஒரு துக்ககரமான நாள். நமது ஸ்தாபனத்தை உருவாக்கிய ஸ்ரீ ஏக்நாத்ஜி ரானடே நற்பண்புகள் நிறைந்த மாமனிதர். குழந்தைப் பருவத்திலிருந்தே புகழுடன் விளங்கியவர். இளமைப் பருவத்திலிருந்தே இந்துக்களின் நலனுக்காக உழைத்தவர். எல்லாக் கஷ்டங்களையும் அஞ்சா நெஞ்சத்துடன் எதிர்கொண்டவர். எல்லாத் தடைகளையும் தாண்ட தேவையான மன உறுதி கொண்டவர். பூரணத்துவம் நிறைந்த மனிதர். இன்று நாம் காணும் விவேகானந்தர் நினைவாலயத்தைக் கட்டியவர். நம்மையெல்லாம் அளவுகடந்த அன்பால் ஆட்கொண்டவர். நம் ஒவ்வொருவரையும் தொடர்ந்து வந்து வாதித்து வழிப்படுத்தும் வல்லமை பெற்றவர் இப்போது நம்மிடையே இல்லை. சுவாமி விவேகானந்தர் கூறினார். ***"நான் இங்கே உள்ள போது உங்களோடு பணியாற்றுவேன். நான் இல்லாதபோது என்னுடைய ஆன்மா உங்கள் மூலமாக பணியாற்றும்."*** உண்மையில் சுவாமி விவேகானந்தருடைய ஆன்மா ஏக்நாத்ஜியின் மூலமாகப் பணியாற்றியுள்ளது. ஆனால் அவருடைய ஆன்மா இந்த வளாகம் முழுவதையும் தொடர்ந்து வியாபித்துவரும். பாறை நினைவாலயத்தில் உள்ள ஒவ்வொரு செங்கல்லும், இந்த வளாகத்தினுள் உள்ள ஒவ்வொரு மரமும், இந்த வளாகத்தினுள் உள்ள ஒவ்வொரு துண்டுக் கற்களும், இந்த வளாகத்தின் ஒவ்வொரு இஞ்ச் இடமும் ஏக்நாத்ஜியின் ஆன்மாவைப் பிரதிபலிக்கும். ஏக்நாத்ஜிக்கு நாம் செய்யக்கூடிய மேன்மையான அஞ்சலி சில வார்த்தைகளைக் கூறுவதால் அல்ல. ஆனால் அவர் எந்த லட்சியத்தை அடைந்திடப் பாடுபட்டாரோ அதற்காகப் பணிபுரிவது, மனித சமூகத்திற்குத் தொண்டு செய்வது. இந்துக்களின் நலனுக்காக, இந்து மக்களுக்காக உழைப்பது – இவையே அவருடைய ஆன்மா சாந்தியடையும் பொருட்டு நாம் தொடர்ந்து செய்து வர வேண்டியவை. எனவே விவேகானந்த கேந்திரத்தின் முத்திரையைத் தாங்கிப் பணிபுரியும் நாம் ஒவ்வொருவரும் அவர் போராடியதன் நோக்கமான வாழ்வின் அடிமட்டத்தில் இருக்கும் நாடு முழுவதும் உள்ள நமது சகோதரர்களின் உன்னதிக்காக முழு உத்வேகத்துடன் சளைக்காது பாடுபட வேண்டும். அதுமட்டுமே அவருடைய பிரிந்த ஆன்மாவிற்கு அமைதியையும், ஆறுதலையும் அளிக்கும்.

பெட்டிச் செய்தி

**ஸ்ரீ ஏக்நாத்ஜி** என்ற இந்த வாழ்க்கை வரலாற்று நூல் புத்தக வடிவில் **விவேகானந்த கேந்திரப் பிரகாசன் டிரஸ்ட், 5, சிங்கராச்சாரி தெரு, சென்னை – 600 005** என்ற முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூ. 70/–



எம்மா கால்வே

# அலையும் துறவி



ஆர்.சி. தாணு

மனிதர்கட்கு மகிழ்ச்சியை
மட்டின்றி வாரி வழங்கியவர்
உண்மையில் சோகத்தின்
சுமை தாங்கி.
நெருங்கி வாட்டிய
நரம்புத் தளர்ச்சி
நெருங்கக் கூடாத
நெறியற்ற வாழ்வு
பிய்த்துப் போட்ட
பிடிவாத குணம்
மூன்றுமே
முடங்கிய வாழ்வின்
முத்தாய்ப்புக்கள்.
ஆதரித்த அன்பு மகளையும்
அபாண்ட விதியின்
அகோரப் பசிக்கு
அனாதை ஆக்கிவிட்டு
ஆனாய்.
சம்பவங்களால்
சச்சரவுக்குள்ளானவள்
சடுதியில் சருகாகிப் போனாள்.
வாட்டிய வாழ்க்கை
வாழப் பிடிக்காது
காலனின் காலினை
கட்டிப் பிடிக்க
ஏரிக்கரையில்
ஏறுவாள்! இறங்குவாள்!
இரண்டிலும் இறுதியில்
தோல்வி தான்!
தற்கொலை முயற்சி
தவறிப் போனது!
தள்ளிப் போனது!
மின்னலொன்று மின்னியது.
ஆம்! கண நேரத்தில்
காந்த சக்தியால்
கவரப் பட்டாள்!
நினைத்து வந்ததை
தொலைத்து விட்டு
நிலைக்க வேண்டியதை
அழைக்க வந்தாள்!
அவலக் குரல்களையே
அதிகம் அறிந்தவள்
முதன் முதலாய்
அமிழ்தினினும் இனிய
அந்நியக் குரலை
அருகினில் கேட்டாள்.
குரல் வந்த திசையில்
குதூகலமாய்ச் சென்றவள்
குணவான் கூறிய
குறிப்பினைக் கேட்டு
கும்பிட்டு நின்றாள்.
ஆங்கு அவர் கூறிய
ஆறுதல் வார்த்தைகள்
அபயமளித்தன.
“அமைதியாய் இரு
அவசரப்பட்டுத்
தத்தளிக்காதே”
தான் இன்னும்
தராதரம் அறியா ஒருவர்
தன்னை தன்னிலும் மேலாய்
தனக்கென தனித்துவப்படுத்தியது
எங்ஙனம்?
கேள்விகள் கேட்கப்படாமலே
மனம் கேள்விக்குறியானது! ஏன்?

# சகோதரி நிவேதிதை

பேராசிரியை திருமதி. ஆர். நாகம் சுப்பிரமணியம்

## சகோதரி நிவேதிதையின் கல்விப்பணி

இந்தியாவின் கலாச்சாரத் தொன்மையையும், மேன்மையையும் அறிந்து போற்றிய நிவேதிதை இந்தியாவில் தனது சமூகப் பணியைத் தொடங்க முதல் முக்கியத்துவ தளமாகக் கல்வித் தளத்தைத் தேர்வு செய்தார். நிவேதிதை தொண்டாற்றத் தொடங்கிய காலம்; இந்திய அரசியலில் புயல்வீசிக் கொண்டிருந்த காலம்; இருண்ட மேகம் சூழ்ந்த சமூகப், பொருளாதார நிலைமைகள் நிலவிய காலம் இச்சூழலில் ஆன்மீக மறுமலர்ச்சியோடு கூடிய தேசீய விழிப்புணர்வும், அவ்விழிப்போடு இசைவுடைய சமூகப் பொருளாதார முன்னேற்றமும் இந்தியாவில் ஏற்பட முதல் தேவை கல்வியறிவு என்ற உறுதியான நம்பிக்கையோடு தமது கல்விப் பணியைத் தொடங்கினார் நிவேதிதை. கல்விப் பணியில் ஏற்கெனவே அனுபவம் பெற்றிருந்தார். 'ஹாலி ஃபாக்ஸ்' கல்லூரியில் தனது கல்வி நிறைவுற்ற பின் பெண்கள் பள்ளிகள் பலவற்றில் அவர் பணியாற்றி இருந்தார். 1892-ம் ஆண்டு தனது 25-வது வயதில் விம்பிள்டன் நகரில் தானே ஒரு பள்ளியை நிறுவினார். கல்வித் தொண்டில் அறிவுச் செறிவோடு கூடிய அர்ப்பணிப்பு உணர்வு, கல்வித் தொண்டு அனுபவத்தால் செழுமையுற்றிருந்தது.



ஆங்கில சகோதரிகள், விவேகானந்தரின் மாணவிகள்

சுவாமி விகோனந்தர் தனது நாட்டில் தொண்டாற்ற குறிப்பாகத் தனது நாட்டுப் பெண்களுக்குக் கல்வித் தொண்டாற்றத் தேவையான திறமைகளையும், தகுதிகளையும், திறமைகளையும் நிவேதிதையிடம் இனம் கண்டு அதை அவரிடம் தெரிவித்த பொழுது தான் பணிபுரிய வேண்டிய தளத்தை அவர் ஐயமறத் தெரிந்து கொண்டார். பெண்களின் முன்னேற்றம் இன்றி, இந்தியப் பாரம்பரியத்தின் எழுச்சியும், மறுமலர்ச்சியும் சாத்தியமில்லை என்பது சுவாமி விவேகானந்தரின்

உறுதியான நம்பிக்கை. சுவாமியின் இந்த நம்பிக்கையோடு உடன்பட்ட நிவேதிதைக்கும் எத்தகைய கல்வி யாருக்கு, எவ்வாறு அளிக்கப்பட வேண்டும் என்ற தெளிவு இருந்தது.

1898-ல் சகோதரி நிவேதிதை முதன்முறையாகக் கவி இரவீந்திர நாத தாகூரைச் சந்தித்தார். அச்சந்திப்பின் பொழுது கவி தாகூர் நிவேதிதையிடம் தம் மகளுக்குக் கல்வி அளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். கூடவே தனது மகளுக்கு ஆங்கிலேயச் சிறுமிகளுக்கு அளிக்கப்படுவது போன்ற கல்வி அளிக்கப்படவேண்டும் என்றும் வேண்டினார். ஆனால் சகோதரி இக்கருத்தை ஏற்கவில்லை. ஏனெனில் ‘‘குழந்தைகளுக்கு அவர்களது தாய்நாட்டின் இலட்சியங்களோடு இசைவுற்று வாழ விரும்பும் தன்மையை ஏற்படுத்தும் கல்வியே அளிக்கப்படவேண்டும், அந்நிய நாடுகளின் இலட்சியங்களையும், வாழ்வியல் தர அளவுகோல்களையும் குழந்தைகள் மீது திணிக்கக்கூடாது’’ என்பது நிவேதிதையின் கருத்து. இக்கருத்தினைப் பாராட்டி ஏற்றுக் கொண்டார் கவி தாகூர். ஏற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாது, நிவேதிதையின் இலட்சியங்களுக்கு ஏற்ப ஒரு பள்ளியை நிறுவத் தனது வீட்டைத் தரத் தயாராய் இருந்தார். ஆனால் அச்சமயம் சகோதரி நிவேதிதை வேறு சில பணிகளில் ஈடுபட வேண்டிய கட்டாயம் இருந்ததால் கவி தாகூரின் விருப்பத்தை ஏற்கும் நிலையில் இல்லை.

பின்னர் அதே ஆண்டு தீபாவளித் திருநாளன்று (நவம்பர் – 12) அன்னை சாரதா தேவியின் ஆசியுடன் ஒரு பள்ளியைத் தொடங்கினார். கல்கத்தாவின் வடபகுதியில் பாக்பஜாரில் போஸ்பாராக் சந்தில் ஒரு வாடகை வீட்டில் தொடங்கப்பட்டது இந்த எளிய பள்ளி. நோயுற்ற ஒரு சில குழந்தைகளோடு மேற்கொள்ளப்பட்ட இந்த எளிய முயற்சி பெரிய சவால்களோடு தொடங்கியது. காஷ்மீர் மன்னர் அளித்த நன்கொடையாகிய வெறும் எண்ணூறு ரூபாய் கையிருப்போடு தொடங்கப்பட்டது இப்பள்ளி. கல்விப் பணியில் ஈடுபட்டிருந்த நிவேதிதை தான் மூன்று பெரும் சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். முதல் சவால் போதிய நிதி திரட்டுதல். இரண்டாவது சவால், மாற்றத்தினை விரும்பாப் பழமைவாதிகளை எதிரிடல். மூன்றாவது சவால் நிவேதிதையின் பூர்வீக தேசியம் காரணமாக அவர்மீது, அவரைப் புரியாதவர்கள் கொண்ட சந்தேகம்.

முதல் சவாலாகிய நிதி திரட்டுதலை சகோதரி நிவேதிதை மனம் தளராது தன்னம்பிக்கையோடு சமாளித்தார். நிவேதிதையின் தன்னலமற்ற தொண்டின் சிறப்பை நன்கு புரிந்த நண்பர்களின் நன்கொடையும் அவரது எழுத்துக்களும், சொற்பொழிவுகளுமே அவரது நிதி ஆதாரங்கள். திரு. மாக்லியோட் என்ற அவரது தோழிக்கு அவர் எழுதிய ஒரு கடிதத்தில் நிதிப் பற்றாக்குறை மட்டும் இல்லாதிருந்தால் தன்னால் இன்னும் பேரளவில் தொண்டாற்ற முடியும் எனக் கூறியுள்ளார். ஆண்டொன்றுக்கு 1000 டாலர் தன் எழுத்துப் பணிமூலம் கிடைத்தால் நல்லது என்ற தன் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். அதே தோழிக்கு

தான் எழுதிய வேறொரு கடிதத்தில் 'நமக்குக் கிடைக்க வேண்டிய நிதி நமது முயற்சியின்றியே வந்து சேரும்' என்று காத்திருக்கும் இயல்பு என்னுடையதன்று, விவேகானந்தா மாணவர் விடுதியைத் தொடர்ந்து நடத்தத் தேவையான நிதியைத் திரட்ட நான் செல்வந்தர்களை நாடிப் பிச்சை ஏற்கப் போகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் மீது நிவேதிதை கொண்டிருந்த அன்பும், தன் குருவின் மீது அவர் கொண்டிருந்த பக்தியும் எந்தத் தடைகளையும் எதிர்கொள்ளும் ஆற்றலை அவருக்குத் தந்திருந்தன. ஆகவே மாற்றத்தை எளிதில் ஏற்றுக் கொள்ளாத பழமைவாத வீடுகளிலிருந்தும் அவரால் பெண்களை வெளியே வரச்செய்து அவர்களுக்குக் கல்விப்பணி ஆற்ற முடிந்தது. அவரது எளிமையும், தேச பக்தியும் அவர் மீது எல்லோருக்கும் நம்பிக்கையும், மதிப்பும் ஏற்படுத்தின.

1898-ல் அவர் தொடங்கிய அந்த எளிய பள்ளியை இடையில் சிறிதுகாலம் கல்விப்பணி தடைப்பட்டாலும் அவர் தன் வாழ்நாள் முழுவதும் பேணிக் காத்தார். அப்பள்ளி இன்று 'இலட்சிய இந்தியப் பெண்மைப் பண்புகளுக்குச் சிதைவில்லா, ஆன்மீக உணர்வுகள் குன்றாப் பண்பாட்டு உருவாக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு முன்மாதிரிப் பெண்கள் பள்ளியாக வளர்ந்து நிற்கிறது. நிவேதிதையின் பள்ளி எத்தனையோ பள்ளிகளோடு இதுவும் ஒன்று' எனக் காணப்பட்ட பள்ளி அன்று. அவரது பள்ளி பல தனித்தன்மைகளைக் கொண்டிருந்தது.

நிவேதிதை ஆரம்பித்த பள்ளியில் தேசீயம் வலியுறுத்தப்பட்டது. தனது மாணவிகளிடம் 'அவர்கள் முதலில் இந்தியர்கள், பாரத வர்ஷத்தின் முன்னணி மக்கள்' என்ற உணர்வை எழுப்பவல்ல கல்வியை நிவேதிதையின் பள்ளி அளித்தது. இவ்வுணர்வை எழுப்ப நிவேதிதை பல நடைமுறை முயற்சிகளை மேற்கொண்டார். 1905-ல் வங்காளம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதன் பின்னர் நிகழ்ந்த சுதேசி இயக்கத்தின் பொழுது, ப்ரஹ்ம சமாஜம் ஆச்சார்ய ப்ரஃபுல்ல சந்திர வீதியில் நடத்திய ஒரு பெண்கள் பள்ளியின் அருகே உள்ள பூங்காவில் பல தேசத் தொண்டர்கள் உணர்ச்சிமிக்க சொற்பொழிவுகள் ஆற்றினர். இச்சொற்பொழிவுகளைச் செவியுற நிவேதிதை தன் மாணவிகளை அழைத்துச் செல்வார். தனது மாணவிகளுக்கு எண்ணும், எழுத்தும் மட்டுமின்றிக் கைத்தொழில்களும் கற்றுக் கொடுத்த அவர், அவர்களது கைவினைப் பொருட்களை 1906-ம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் இடம் பெற்றிருந்த சுதேசிப் பொருட்காட்சிக்கு அனுப்பி வைத்தார். **'வந்தே மாதரம்'** இசைப்பது அரசால் தடைசெய்யப்பட்டிருந்த போதும், தனது பள்ளியில் அன்றாடப் பிரார்த்தனையின் போது தன் மாணவியரை **வந்தே மாதரம்** இசைக்கச் செய்தார். தேசீய உணர்வும், இந்தியக் கலாச்சாரத்தின் மேன்மை பற்றிய பெருமிதமும் மாணவிகளுக்கு ஊட்டப்பட்டது. ''உலகக் கலாச்சாரங்களுக்குள்ளே, மிக உயர்ந்த கலாச்சாரம் பாரதக் கலாச்சாரம். இந்தப் பெருமைமிக்க கலாச்சாரத்தின் வாரிசுகள் நீங்கள் என்பதை ஒரு பொழுதும்

மறக்க வேண்டாம். கார்க்கியும், மைத்ரேயியும், சீதையும், சாவித்திரியும், லீலாவதியும் தோன்றிய நாட்டில் நீங்கள் பிறந்திருப்பது ஒரு பெறற்கரிய பேறு, ஆகவே இவ்வளவு சிறப்புடைய கலாச்சாரத்தின் வாரிசுகளாகிய உங்களது தார்மீக, ஆன்மீகக் கடமை இக்கலாச்சாரத்தை மங்கவிடாமல், மேலும் ஒளிரச் செய்வது'' என்று சகோதரி நிவேதிதை தன் மாணவிகளுக்கு ஓயாது எடுத்துரைப்பார்.

சகோதரி நிவேதிதை அளித்த கல்வி மாணவிகளிடம் தேசீய உணர்வை வளர்த்தது. கைவினை ஆற்றல்களை வளர்த்தது. ஆன்மீக ஞானத்தை வளர்த்தது. அறிவியல் அறிவையும், நாட்டத்தையும் வளர்த்தது. நிர்வாக ஆற்றலை வளர்த்தது. இவற்றையெல்லாம் ஒருசேர வளர்த்த அவரது கல்வித் தொண்டின் தனிச்சிறப்பு, இப்பண்புகளும், ஆற்றல்களும் ஒன்றுக்கொன்று முரண்படா வகையில் இசைவுடன் வளர்க்கப்பட்டன.

1903-ம் ஆண்டு அன்றைய அரசு ஒரு கல்வி ஆணை பிறப்பித்தது. அதன்படி எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் கட்டாயமாக 'கிண்டர் கார்டன்' கல்விமுறையே பின்பற்றப்பட வேண்டும். இதுபற்றி சுவாமி அகண்டானந்தா நிவேதிதைக்கு எழுதிய கடிதத்திற்கு நிவேதிதை அனுப்பிய பதில் கடிதம் கல்வி புகட்டுவதில் நிவேதிதை கொண்டிருந்த ஆழ்ந்த அறிவையும், உறுதியான நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது.

அரசின் கல்வி ஆணை ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்திய ஐயங்களையும், அச்சங்களையும் போக்கும் வகையில் நிவேதிதை எழுதிய பதிலில், அரசு ஆணை வலியுறுத்தும் நடைமுறைகளை மேற்கொள்வது இந்திய அறிவு நுட்பத்திற்கும், திறமைக்கும் சாத்தியமல்லாத காரியம் அல்ல என்று நம்பிக்கை தெரிவித்தார். கிண்டர்கார்டன் முறைக்கல்வியைப் பற்றிய அறிவும், நடைமுறைப்படுத்தத் தேவையான செயல்திறனையும் ஆசிரியர்கள் பெறத் தேவையான பயிற்சி அளிப்பதற்கும் உடனே தயாரானார்.

19-ம் நூற்றாண்டில் சுவிட்சர்லாந்தில் வாழ்ந்தவர் பெஸ்டலோஸி என்னும் அறிஞர். மனிதர்களிடம் அளவற்ற அன்பும், துறவு மனப்பாங்கும் கொண்டிருந்த அந்த அறிஞர், 'மனிதன், மனிதனுக்கு ஆற்றவல்ல அருந்தொண்டு கல்வி அளித்தலே' என்ற நம்பிக்கை கொண்டிருந்தார். மக்களிடம் தெளிந்த சிந்தனைத் திறன் இல்லாமைக்குக் காரணம் அவர்களிடம் தெளிந்த அறிவின்மை. தெளிந்த அறிவுக்கு ஆதார,ம் அநுபவம் என்பது பெஸ்டலோஸியின் கருத்து. அநுபவத்தை புலன், மன வழி உணர்ந்தறிதல் மூலமே பெற முடியும் என்பது அவரது நம்பிக்கை. இவ்வகை உணர்ந்தறிதல் மூலம் அறிவு பெறுவதில் மூன்று நிலைகள் உள்ளன என விளக்கினார் அவர். அவர் விளக்கிய இம்மூன்று நிலைகள் கீழ்வருவன. 1) உணர்தல், 2) எண்ணம் அல்லது சிந்தனை தோற்றம், 3) வெளிப்பாடு.

பெஸ்டலோஸியின் கருத்துக்கள் மக்களிடையே அதிக செல்வாக்குப் பெறவில்லை. தமது முதுமைக்காலத்தில் மனம் தளர்வுற்ற நிலையில் அவர் இருந்தபொழுது அவருக்குக் கிடைத்த சீடரே கிண்டர்கார்டன் முறைக்கல்வியை உருவாக்கிய ஃப்ரெடரிக் ஃப்ரோபெல். பெஸ்டலோஸியின் கல்விக்

கோட்பாடுகளைத் தெளிவாகப் புரிந்த ஃப்ரோபெல். 'மனிதனுக்குரிய கல்வி' – என்ற நூலை எழுதினார். அறிவு, மனதின் சக்தியாக உருமாறும் பொழுதே பயனுடையதாகிறது. எண்ணையும், எழுத்தையும் குழந்தைகளுக்கு அறிவித்தல் மட்டுமே கல்வி அன்று, அறிவு குழந்தையின் மன ஆற்றலாக வளர்ச்சி பெறப் பெறக் குழந்தையிடம் ஏற்படும் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் தம் குறிக்கோளாகக் கொண்டு ஆசிரியர்கள் கல்வி கற்பித்தல் வேண்டும் என்பது ஃப்ரோபெல் அவர்களது கருத்து. குழந்தைகளும், சிறுவர்களும் விளையாடும் முறைகளை உற்றுநோக்கி ஆராய்ந்து அவர் கிண்டர்கார்டன் கல்வி முறையை உருவாக்கினார். 'சிறுவர்களின் தோட்டம்' எனப் பொருள்படும் இக்கல்வி முறையில் ஆசிரியரே தோட்டக்காரர். ஒவ்வொரு குழந்தையும் ஒரு செடி.

குழந்தைகளின் திறமையைப் படிப்படியாக வளர்க்கும் ஏழு படிநிலைகளை வரையறுத்து ஒவ்வொரு படிநிலையிலும் வளர்க்கப்படும் ஆற்றல்களையும், ஆற்றல் வளர்ப்பு முறைகளையும் எடுத்துரைத்துள்ளார், ஃப்ரோபெல். ஒவ்வொரு படிநிலையிலும் குழந்தைக்கு ஆற்றல் வளர்ச்சி அளிக்கப்படுவதற்குத் தேவையான பொருட்களையும் அன்பளிப்பு என்ற பெயராலேயே குறிப்பிடுகிறார் ஃப்ரோபெல்.

முதல் அன்பளிப்பு நிலையில் அது வெவ்வேறு வண்ணப் பந்துகளைக் குழந்தைகளிடம் கொடுத்து அப்பந்துகளைக் கொண்டு குழந்தைகள் விளையாடும் பொழுது அவர்களிடம் வளரும் ஆற்றல்களை வளர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இம்முதல் நிலையில் குழந்தைகள் பந்தையே எலியாக, பல்வேறு பொம்மைகளாக, விலங்குகளாகக் கற்பனை செய்து கொண்டு விளையாடத் தொடங்குகின்றனர். ஆசிரியர் இந்தக் கற்பனை விளையாட்டுக்களை ஊக்குவிக்கிறார். இவ்விளையாட்டுக்கள் மூலம் ஒழுங்கும், கட்டுப்பாடும், ஒற்றுமை உணர்வும், கூட்டுறவு உணர்வும் குழந்தைகளிடம் இயல்பாகவே எவ்விதக் கட்டாய வலியுறுத்தல்களும் இன்றி வளர்கின்றன. இப்படியே ஒவ்வொரு படி நிலையிலும் எட்டு கன சதுர வடிவங்களைக் கொண்டும், பந்து, பட்டம் போன்றவற்றைக் கொண்டும் வடிவமைக்கும் திறன், கட்டுமானத் திறன், வண்ணம் தீட்டும் திறன், பொருட்களை எண்ணி அறியும் திறன், திசைகளை அறியும் திறன், படங்கள் வரையும் திறன் மாறுபட்ட உருவங்களைக் கண்டறியும் திறன் எனப் பன்முகத் திறமைகள் வளர்க்கப்படுகின்றன.

மேற்கண்ட கிண்டர்கார்டன் முறையை அறிந்துணர்ந்து பாராட்டி ஏற்றுக் கொண்ட நிவேதிதை தாம் இந்தியா மீது கொண்ட பக்தியுடன் கலந்த பற்றினாலும், இந்தியச் சூழல், வாழ்க்கை முறைகள் பற்றி அவருக்கிருந்த தெளிந்த அறிவு காரணமாகவும் ஃப்ரோபெல் உருவாக்கிய கிண்டர் கார்டன் முறையை இந்தியக் குழந்தைகளின் கல்விக்குப் பயன்படுத்த வழிமுறைகளைச் சிந்தித்துச் செயல்படுத்தினார்.

சுவாமி அகண்டானந்தருக்கு அவர் எழுதிய பதில் கடிதத்தில் கிண்டர்கார்டன் கல்வி முறையைக் கட்டாயப்படுத்தும் அரசாணை பற்றிய ஐயங்களையும், அச்சங்களையும் போக்கி அதை ஏற்றுக் கொள்வது பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் அரசாணையின் குறையையும் சுட்டிக் காட்டியுள்ளார். அரசாணையின் பொதுவான பரிந்துரைகள் இந்தியச் சூழல்களைப் புரிந்து கொண்ட அறிவை வெளிப்படுத்தாமையை எடுத்துக்கூறியுள்ள நிவேதிதை இந்தியக் குழந்தைகளுக்கு ஏற்ப கிண்டர்கார்டன் கல்விமுறையின் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்ட குழந்தைக் கல்வி முறையைச் செயற்படுத்த முடியும் எனப் பல யோசனைகளைக் கூறியுள்ளார். அதுபோல ஃப்ரோபெல்லின் முறையிலும் உள்ள சிறு இந்தியச் சூழலுக்கு ஒவ்வாத சிறு குறைகளையும் சுட்டிக் காட்டியுள்ளார். கல்விச் சிந்தனையாளர் பெஸ்டலோஸி கூறிய சிறந்த கருத்தான குழந்தை வளரும் பொழுது தனது சொந்த இன நடைமுறைகளையே பின்பற்றுகிறது என்பதை ஏற்றுக் கல்வி புகட்டல் சாதனங்களை எப்படி இந்திய மண்ணில் இருந்து எளிதாகத் தேர்வு செய்யலாம் என வழிமுறைகள் கூறியுள்ளார். ஃப்ரோபெல் உருவாக்கிய ஏழு படிநிலைக் கல்வி முறையில் ஒவ்வொரு படிநிலையிலும் தேவைப்படும் கல்வி புகட்டல் சாதனங்களையும் ஃப்ரோபெல் பட்டியலிட்டிருந்தார். அப்பட்டியலில் கனசதுர வடிவங்கள், ஓடுகள், வைக்கோல், பாசிமணிகள், கிரிக்கெட் பந்துகள், டென்னிஸ் பந்துகள், உதை பந்துகள், சாதாரணப் பந்துகள் எனப் பலவகைப் பந்துகள் எனப் பல்வேறு பொருட்கள் இடம் பெற்றிருந்தன. குழந்தைகள் கற்கும் பொழுது ஒவ்வொரு படிநிலையிலும் என்னென்ன பொருட்கள் எவ்வெவ்வாறு பயன்படுத்தப்படவேண்டும் என்பதற்கான திட்டங்களையும் ஃப்ரோபெல் அறிவித்திருந்தார். ஃப்ரோபெல்லின் கல்விக் கோட்பாடுகளை மட்டுமின்றி, அவரது செயல்முறைத் திட்டங்கள், கல்வி உதவிச் சாதனங்கள் முதலியவற்றையும் வலியுறுத்தியது அரசு ஆணை.

சகோதரி நிவேதிதை ஜெர்மனிக்குப் பொருந்தும் இக்கல்வி முறையை அப்படியே இந்தியாவில் செயல்படுத்தத் தேவையில்லை, இயலவும் இயலாது எனக் குறிப்பிட்டு, கிண்டர்கார்டன் முறையின் அடிப்படைக் கோட்பாடுகளை ஏற்று, குறைந்த செலவில் இந்தியக் குழந்தைகளுக்குத் தரமான கல்வி அளிக்கக் கூறியுள்ள ஆலோசனைகளில் கல்விப் பணியில் அவருக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும், அறிவுத் திறனையும், இந்தியாவின் மீது அவர் கொண்டிருந்த பக்தியையும் வெளிப்படுத்துகின்றன. இந்தியக் கிராம விதிகளில் குழந்தைகள் களிமண், பசுஞ்சாணம், செங்கற்கள், கற்கள், வைக்கோல் முதலிய செலவின்றி எளிதில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு கற்பனைத் திறத்தோடும், கைவினை நுட்ப ஆற்றலோடும் விளையாடுவதைக் கண்ணுற்றிருந்தார். ஆகவே களிமண் போன்ற எங்கும் கிடைக்கும் எளிய பொருளைக் கொண்டு கல்வி புகட்டலை அரசாணை வலியுறுத்தியிருந்தால் போதுமானது என்று சுவாமி அகண்டானந்தருக்கு எழுதியுள்ளார். மேலும் இந்தியப் புராணங்கள், இந்தியாவில் வழங்கும் கதைகள் முதலியவற்றைக் குழந்தைகளுக்கு விளக்க எவ்வாறு

சாதாரணப் பொருட்களைப் பயன்படுத்த முடியும் என்பதை விளக்கியுள்ளார். செங்கற்களை அடுக்கி குருக்ஷேத்திரப் போரைப் பற்றி எடுத்துரைத்தல், ஒரு செங்கல்லை அர்ஜுனனின் ரதமாகவும், எதிரே வேறொரு செங்கல்லை பீமனுடைய ரதமாகவும் குழந்தைகளைக் கற்பனை செய்ய வைத்தல், விதைகள் இலைகளைக் கொண்டு, கணிதம், வரலாறு, ஓவியம், வடிவங்கள் அமைத்தல் போன்ற யோசனைகளை எடுத்துரைத்துள்ளார். இந்தியக் கிராமங்களில் கூடப் பெண்கள் கணிமண்கொண்டு தட்டுக்கள் செய்வதையும் காகிதத்தைக் கொண்டு நுண்ணிய அலங்காரப் பொருட்கள் செய்வதையும் அறிந்திருந்த நிவேதிதை எவ்வாறு இந்தியாவில் பாமரர்களிடம் கூடப் பரவியிருந்த கலைத்திறமைகளைப் பயன்படுத்திக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க முடியும் என்பதைக் கல்வித்துறை அறிந்து கொள்ளாமலே கல்வி பற்றிய ஆணை பிறப்பித்துள்ளதைக் குறிப்பிட்டு வருந்தியுள்ளார்.

ஃப்ரோபெல்லின் சிறந்த கோட்பாடுகளைச் செயற்படுத்தும்பொழுது, இந்திய அறிவையும், ஆற்றல்களையும், கலைத்திறமைகளையும் பயன்படுத்தாமல், அந்நிய நாட்டுச் சூழலுக்கேற்ற முறையை அப்படியே பயன்படுத்தினால் உலகம் நம்மைக் கண்டு சிரிக்கும் என்பது நிவேதிதையின் கருத்து. கிண்டர்கார்டன் கல்வி முறையை சுவாமி அகண்டானந்தர் முழுமையாக அறிந்து கொள்ளத் தேவையான புத்தகங்களை உடனடியாகப் பெற முயற்சி செய்த நிவேதிதை இந்தியாவில் அம்முறையை இந்தியக் கலாச்சாரச் செழுமையையும் கற்பிக்கும் வகையில் செயற்படுத்த தாம் ஒரு நூல் எழுத விழைவதையும் சுவாமி அகண்டானந்தருக்கு எழுதிய பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். கல்வி பருப்பொருட்களைத் துணையாகக் கொண்டு தொடங்கப்படும். ஆனால் கல்வியின் இறுதி லட்சியம் முழுமையான கவனத்திற்குப் பயிற்சி அளித்தலும், மனத்தை ஒருமுகப்படுத்துதலுமே இவ்வுண்மையை இந்தியா புரிந்துள்ளது. ஆனால் ஐரோப்பா ஒருகாலும் புரிந்து கொள்ள இயலாது என்ற தனது கருத்தை வெளியிட்டுக் கடிதத்தை நிறைவு செய்துள்ளார் நிவேதிதை.


இவ்வாறு ஆழ்ந்த விஷய ஞானத்தோடும் தீவிர தேச பக்தியோடும், குரு பக்தியோடும் திறமையுடன் கல்வித் தொண்டாற்றிய சகோதரி நிவேதிதை உறுதியுடன் ஏற்றுக் கொண்டிருந்த கல்விக் கோட்பாடுகளும், கல்வி பற்றிய அவரது சிந்தனைகளும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், கல்வித் துறையினருக்கும் மிகுந்த பயனளிப்பவை.

இப்பக்கத்திற்கான விளம்பர நிதி உதவி
எஞ்ஜினியர் திரு. ஜி. மதிவாணன், சென்னை

# விவேகானந்த கேந்திரத்திற்கு தேசீய விருது

கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரம் இவ்வாண்டுக்கான ***சத்பால் மித்தல் தேசீய விருது***–க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மானுட சேவையில் சிறப்பான பணி ஆற்றிய ஸ்தாபனங்களுக்கான விருது இது.

துன்புறும் மனித இனத்திற்கு ஓய்வு ஒழிச்சல் இன்றி விவேகானந்த கேந்திரம் பணியாற்றி வருவதை கவனத்தில் கொண்டு, நேரு சித்தாந்த கேந்திர டிரஸ்ட் (லூதியானா) பரிசளிப்புக்குழு, கேந்திரத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.




லூதியானாவில் (பஞ்சாப் மாநிலம்) 11.11.2011 அன்று நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் பஞ்சாப் ஆளுனர் மேதகு ஸ்ரீ சிவராஜ் பாட்டீல், கேந்திரத் துணைத்தலைவர் ஸ்ரீ ஏ. பாலகிருஷ்ணனிடம் இவ்விருதை வழங்கினார். ரூபாய் இரண்டு லட்சத்திற்கான காசோலை, ஒரு தங்கப் பதக்கம், ஒரு பாராட்டுப் பத்திரம் இவை வழங்கப்பட்டன.

ஆளுனர் தன் மகிழ்ச்சி உரையில் விவேகானந்தப் பாறை நினைவாலயப் பணிக்கு நான் நன்கொடை திரட்டிய பழைய நாட்களை நினைவு கூர்ந்து கேந்திரம் இவ்விருது பெற்றதில் தனக்கு மகிழ்ச்சி என்றார்.

டிரஸ்ட் நிறுவனர் சமூக சேவகர் ஸ்ரீ சத்பால் மித்தலின் நினைவாக இந்த விருது வழங்கப்படுகிறது.

**கேந்திரச் செய்தி**

நெல்லை மாவட்டம் சுப்புலாபுரம் குமாரபுரம், சிவகிரி, மலையடிக்குறிச்சி (புதிய பள்ளி) துரைச்சாமிபுரம், நாகலாபுரம் (தூத்துக்குடி மாவட்டம்) ஆகியவை சுதந்திர தினவிழாவை குழந்தைகளுக்கு தேச பக்தி உணர்வு ததும்பும் வண்ணம் கொண்டாடின. அம்பையை அடுத்த மன்னார்கோவில், ஆறுமுகம்பட்டி, புதுக்கிராமம் ஆகியவையும் சுதந்திர தினவிழாவை அழகுற நடத்தின. பண்டாரபுரமும் விழாவில் பங்கேற்றது. நம்பிப்பத்தும் அவ்வாறே.


# சுவாமி விவேகானந்தர், விஞ்ஞானம் - ஆன்மீகம்

**டாக்டர் ஆர். சிதம்பரம்**

**பாரத அரசின் முதன்மை விஞ்ஞான ஆலோசகர், முன்னாள் தலைவர், பாரத அணுசக்தி ஆணையம், இன்னாள் துணைத்தலைவர் உலக அணுசக்தி ஆணையம்**

**(கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரம் மதுரையில் ஏற்பாடு செய்திருந்த தமிழ் நாடளாவிய வெல்க வெல்கவே!! இளைஞர் முகாமின் நிறைவு விழாவில் 26.01.2011 அன்று ஆற்றிய நிறைவுப் பேருரையின் தமிழாக்கம்)**

**ஜாம்ஷெட்ஜி டாட்டா**



1984-ம் ஆண்டில் பாரத அரசு சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளாகிய ஜனவரி 12-ஐ தேசீய இளைஞர்தினமாக அறிவித்தது. பாரத இளைஞர்கட்கு, சுவாமிஜியின் தத்துவங்களும், அவர் எந்த லட்சியங்கட்காக வாழ்ந்து. சிரமப்பட்டு உழைத்தாரோ அந்த லட்சியங்களும் மகத்தான தெய்வீகப் புத்துணர்ச்சி தரும் உந்துசக்தியாக இருக்கவேண்டும் என்பதே அந்த அறிவிப்பின் நோக்கம்.

இளைஞர் நரேந்திரநாத் தான் பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர் ஆனார். ஒரு நூற்றாண்டுக்கு முன் அவர் வாழ்ந்த போதிலும், அவர் நவீனகால பாரத இளைஞர்களின் பிரதிநிதியாகத் திகழ்ந்தார். சந்தேகப்படுபவராகவும், நம்பிக்கை அற்றவராகவும் அவர் இருந்தார். நவீனகாலப் பகுத்தறிவாளர் எவரையும் போல், பரிசோதனை செய்து பார்க்காமல், எதையும் ஏற்றுக்கொள்ள அவர் இணங்கவில்லை - முன்மொழியப்பட்ட சமய உண்மைகளையும் கூடத்தான்.

பிற்காலத்தில் அவர், முனிவரும், யோகியுமான மகத்தான ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸருடன் தொடர்பு கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பாரம்பரிய, ஆன்மீக, துறவுநெறி, உபநிஷத பாரதத்தின் அடையாளச் சின்னம் ஆவார். அவர்கள் கூடிப்பேசியது, கொஞ்ச காலத்திற்கு நடந்தது. அதனால் நரேந்திரநாத், சுவாமி விவேகானந்தர் எனும் பெயரில் நவீனகாலத்தில் அத்வைத வேதாந்தத்துக்கு விளக்கம் அளிப்பவராக உருமாறினார்.

23.11.1898 அன்று ஜாம்ஷெட்ஜி என். டாட்டா சுவாமி விவேகானந்தருக்கு எழுதிய கடிதத்தில் ''பாரதத்தில் ஒரு விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி'' கேட்டுக் கொண்டார். பிற்காலத்தில் இந்த நிறுவனம் பங்களூரு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் என்ற பெயரில் புகழ்பெற்றது. 1893–ல், ஜப்பானில் இருந்து அவர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர். டாட்டா, பாரத நாட்டுக்கு, இரும்பு உருக்குத் தொழிலைக் கொண்டு வரும் லட்சியப்பணியில் ஈடுபட்டிருந்தார். சுவாமி விவேகானந்தர் டாட்டாவுக்கு ஆலோசனை கூறினார். ''உலோகவியல் தொழில் நுணுக்கத்தைக் கொண்டு வருவது மட்டும் போதாது. நம் தேசத்திலேயே, டாட்டா உலோகவியல் விஞ்ஞானத்தையும் வளர்க்க வேண்டும்.''

**எவ்வளவு துரதிருஷ்டியுடன் கூடிய ஆலோசனை இது! எந்தத் தொழில் முறை விஞ்ஞானியும் இதைவிட மேலான ஆலோசனையை வழங்கி இருக்க முடியாது!** இதனால்தான் டாட்டா விஞ்ஞானத்திற்குள் இந்தத் துறவு மனப்பான்மையைக் கொண்டு வர விழைந்தார். சுவாமி விகோனந்தருக்கு அனுப்பிய அழைப்பிதழில் டாட்டா கூறுகிறார். ''இந்தப் பேரியக்கத்திற்கு (விஞ்ஞான ஆராய்ச்சிக்கழகம் நிறுவும் பணிக்கு) சுவாமி விவேகானந்தரை விட வேறு யார் அதிகப் பொருத்தமான தளபதியாக இருக்க முடியும்? எனக்குத் தெரியவில்லை.''

இன்றைய பாரதத்திற்கு, தலைமைப் பண்புடையவர்கள் தேவை – அரசியல்வாதிகள், நிர்வாகிகள், மேலாண்மையாளர்கள், தொழில் அதிபர்கள், போராளிகள், விஞ்ஞானிகள் – குணநலச்சிறப்புடைய தலைவர்கள் தேவை. அடிப்படைக் கொள்கைகளில் விட்டுக் கொடுக்காத மனிதர்கள் தேவை.

சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். ''கொள்கைகளை விட்டுக் கொடுக்கும் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருங்கள். யாருடனும் சச்சரவில் இறங்கவேண்டும் என்று இதற்குப் பொருள் இல்லை. இன்பத்திலும், துன்பத்திலும் நீங்கள் உங்கள் நிலைப்பாட்டில் உறுதியுடன் இருக்கவேண்டும். பிறருக்காக இவற்றில் நீங்கள் ஒருபோதும் சரிக்கட்டிக் கொண்டு போக வேண்டாம். தன் கருத்துக்கு ஆதரவு தேடும் பேராசையில் பிறருடைய அற்ப ஆசைகட்குப் பணிந்து போக வேண்டாம்.

மாபெரும் விஞ்ஞான மேதையான ஐன்ஸ்டைன் ஒருசமயம் கூறினார். ''ஒரு மகத்தான விஞ்ஞானிக்கு அறிவு தான் முக்கியம் என்று பெரும்பாலான மக்கள் கருதுகிறார்கள். அவர்கள் கூறுவது தவறு. நன்னடத்தைதான், ஒழுக்கச் சிறப்புத்தான் மகத்தான விஞ்ஞானிகளை உருவாக்குகிறது.''

யார் வேண்டுமானால் பெரிய விஞ்ஞானி ஆகிவிடலாம் என்று இதற்குப் பொருள் அல்ல! பேரறிவு கட்டாயம் தேவை. ஆனால் அதுமட்டும் போதாது. நன்னடத்தை, ஒழுக்கச் சிறப்பு, அதிக முக்கியத்துவம் உடையது. நன்னடத்தை, ஒழுக்கச் சிறப்பு என்றால் என்ன என்று வரையறுத்து விடுவது எளிதல்ல! அதன்பொருள் நாணயம்/ நேர்மை. அதன்பொருள், தனிமனிதர் தன் குறைநிறைகட்கும் நின்று மேன்மையை விருப்பத்தை தேடிச் செல்லுதல். எதிர்ப்புகளின் முன்னாலும் விடாமல் முயற்சி செய்ய வேண்டும் என்று இதற்குப் பொருள். தேசீய லட்சியங்கள், சமூக லட்சியங்கள் இவற்றுக்கேற்பப் பொறுப்புடன் நடந்து கொள்ளுதல். அதேசமயம், நீதி, சமுதாய நியாயம் இவற்றிலும் பொறுப்புடன் நடந்து கொள்ளுதல் என்று பொருள். நன்னடத்தை/ ஒழுக்கச் சிறப்பு என்பது, தலைவர்கட்கு மட்டுமின்றி ஒவ்வொரு குடிமகனுக்குமே வேண்டும்.

சபலங்கள், நெருக்கடிகள் ஏற்படும் போதும் ஒழுக்கமும், நேர்மையும் கொண்டிருக்க **தைரியம்** வேண்டும் எழுந்து நில்! **தைரியத்துடன் இரு. பலம் கொண்டு விளங்கு** என்பது சுவாமி விகோனந்தரின் சொற்பொழிவுகளில் திரும்பத்திரும்ப வரும் கருத்து ஆகும்.

தனி மனிதரைப் போலவே, ஒரு தேசத்திற்கும் பலம் தேவை. நான் அடிக்கடி கூறி வந்திருக்கிறேன். ''தேசவள முன்னேற்றமும், தேசப் பாதுகாப்பும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். பாதுகாப்பில்லாத வளமுன்னேற்றம் ஆபத்துக்கு உள்ளாகக் கூடும். வளமுன்னேற்றம் இல்லாத வெறும் பாதுகாப்பு என்பது அர்த்தமில்லாதது. உங்களிடம் பலம் இருக்கிறது என்று பிறர் ஏற்றுக் கொள்வதால் ஏற்படும் மிகப்பெரிய லாபம் என்ன தெரியும்! அந்தப் பலத்தை நீங்கள் பயன்படுத்திக் காட்ட வேண்டிய தேவை இல்லை என்பதுதான்! நீங்கள் பலவீனர் என்று பிறர் கருதினால் அதனால் என்ன நஷ்டம்? எதிரி சாகசம் செய்யத் துவங்கி விடுவான் என்பதே.''

உண்மையில் இதுதான் ''நம்பத்தகுந்த, குறைந்த பட்ச அளவிலான, எதிரியைத் தடுக்கும் அணுசக்தி'' என்ற நம் வாதத்தின் அடிப்படை.

உலகத்தின் முன்னணி விஞ்ஞானிகளான ஐன்ஸ்டைன், சாம்மர்ஃபெல்ட் போன்றவர்களிடத்தில் பகவத்கீதை பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் முதல் அணுகுண்டு சோதனையில் பேரொளியைப் பார்த்ததும் ராபர்ட் ஓப்பன் ஹீமர் கூறினார். எனக்கு பகவத்கீதையில் ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது. அதில் கிருஷ்ணன் அர்ஜுனனிடம் கூறுகிறார் ''என் உண்மை வடிவை நீ கண்டால் அது ஒரே நேரத்தில் ஆயிரம் சூரியன்கள் ஒளிவீசுவதைக் காட்டிலும் அதிகப் பிரகாசத்துடன் விளங்கும்.''

பகவத்கீதையில் மிகவும் சாதாரணமாக மேற்கோள் காட்டப்படும் சுலோகம் 'கடமையைச் செய், பலனைப் பற்றிக் கவலைப்படாதே' என்று உங்களுக்கு யோசனை கூறும் பாடல் தான். (தொடரும்)

# திருவட்டாரில் தீப வழிபாடு

மாதாஜி மீராபுரி அம்பாள் அவர்கள்



கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் ஆதிசேவப் பெருமாள் திருக்கோவில் சீரமைப்பு திருப்பணிகள் வெகு வேகமாக நடந்து வருகின்றன. ஆழ்வார்கள் பாடல் பெற்ற 108 திருப்பதிகளில் ஒன்றாகிய இவ்வூரில் நான்கு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு கேந்திர திருவிளக்குப் பூஜை மறுதுவக்கம் பெற்றுள்ளது. உள்ளூர் அன்பர்களின் உழைப்பும், பக்தியும், ஈடுபாடும் போற்றத்தக்கவை. கிராம முன்னேற்றத் திட்டச் செயலாளர், வெள்ளிமலை ஆத்மசிவானந்தா சுவாமி, திருவனந்தபுரம் அன்பர் சிவம் தம்பதியினர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். சிறுவர் புத்தக மாலையின் புது வெளியீடுகள் இவ்விழாவில் வெளியிடப்பட்டன. நெட்டாங்கோடு சாரதேஸ்வரி ஆசிரமத்தின் மாதாஜி மீராபுரி அம்பாள் அவர்கள் திருவிளக்குப் பூஜையை நடத்தினார்கள். 47 ஊர்களில் இருந்து வந்த 1000 தாய்மார்கள் வழிபாடு நடத்தினர். நன்றியுரை திருமதி கிருஷ்ணம்மாள்.

# வள்ளியூரில் யோகப்பயிற்சி முகாம்

வள்ளியூரில் கேந்திரம் நடத்திய யோகப் பயிற்சி முகாமில் 87 பேர் ஒருவாரம் பயிற்சி எடுத்தனர். ஆண்களுக்கு காலையிலும், பெண்களுக்கு மாலையிலும், ஐ.ற்றி.ஐ மாணவர்களுக்கு பகல் நேரத்திலும் வகுப்புக்கள் நடந்தன. கேந்திர வி.கே.வி. தாளாளர் எஸ்.கே. சுப்பிரமணியன், செயலாளர் திரு. ஐயப்பன், அன்பர் திரு. கந்தசாமி, கேந்திரத் தொண்டர்கள் ஷண்முக பாரதி, திருமதி ஜானகிபுஷ்பம், எம். விமலா ஆகியோர் பயிற்சி நடத்தியும், விளக்க உரை அளித்தும் முகாமின் வெற்றிக்கு அடிகோலினார்கள். கிரியா பயிற்சியை கோவில்பட்டி கேந்திரத் தொண்டர் பரமகுரு நடத்தினார். குடும்ப வாழ்வின் தூய்மையை வற்புறுத்தும் சொற்பொழிவுடன் முகாம் பூரணம் அடைந்தது.

அமரர் சரஸ்வதி கிருஷ்ணன் அவர்கள் நினைவாக

# அம்பாசமுத்திரத்தில் சமய மாநாடு

**திரு.சங்கரன்ஜி தலைமைஉரை, திருமதி ஜானகிபுஷ்பம் சிறப்புரை**




நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் பகுதியில் கேந்திரப் பணிகளுக்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு உண்டு. குறிப்பாக ஆசிரியப் பெருமக்கள் கேந்திரத்தில் லட்சியங்களைப் புரிந்து கொண்டு தொண்டு புரியும் அறிவு படைத்தவர்கள், திறமைக்கும் பஞ்சம் இல்லை. அம்பை கோமதி மஹாலில் சமய வகுப்பு மாநாடும் இதேபோல் சிறப்புற நடைபெற்றது. தூத்துக்குடி கேந்திர நகர் பிரமுக் திரு. சங்கரன் ஆசியுரை வழங்கினார்கள். அடைச்சாணி, இடைக்கால், புதுகிராமம், மன்னார்கோவில், ஆறுமுகம்பட்டி, நரையப்பபுரம் சமய வகுப்பு மாணவச் செல்வங்கள் 122 பேர் பங்கேற்றனர். நாடகங்கள், பேச்சு, தெய்வத் திருமேனி வேடம், தனிநடிப்பு, குழுப் பாடல்கள், நிறைய பரிசுகள், கேந்திர சகோதரி திருமதி ஜானகிபுஷ்பத்தின் நிறைவுரை ஆகியவற்றால் விழா பொலிவு பெற்று விளங்கியது. தகவல் திருமதி சி. சரஸ்வதி

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

# சுவாமி விவேகானந்தரின் 150-வது பிறந்த நாள் விழா முன்னொளி

குமரி மாவட்டம் பேயன்குழி சுவாமி விவேகானந்தரின் 150-வது பிறந்த நாள் விழாவை உள்ளூர் மக்களின் ஆதரவுடன் கொண்டாடுவதற்காக ஆங்காங்கே உள்ளூர்க் குழுக்கள் அமைத்து கேந்திரம் பணிபுரிந்து வருகிறது. பேயன்குழியில் நடந்த விழாவில் திருக்கோவில் பொறுப்பாளர்களும், ஊர்ப் பெரியவர்களும், பள்ளித் தலைமை ஆசிரியையும் ஒன்று கூடி விழாவை எப்படிச் சிறப்பாக நடத்தலாம் என்று திட்டமிட்டு செயல்படுத்தத் துவங்கி உள்ளார்கள். ஊர்த்தலைவர் ஸ்ரீ பத்மநாபன் பொறுப்பேற்றுக் கொண்டு அனைவருக்கும் உற்சாகம் ஊட்டுகிறார்கள். கேந்திரத் தொண்டர்கள் திரு. அருமைத்தங்கமும், லீலாவும் களப்பணியில் இறங்கி விட்டால் வெற்றிக்குக் கேட்கவா வேண்டும்!

கேந்திர நிறுவனர் மா. ஏக்நாத்ஜியின் நினைவு நாள் குமரி மாவட்டம் குறுந்தொட்டிவிளை, மேக்காடு, புத்தளம், கலிங்கராஜபுரம், மொட்டவிளை, பேரை திக்குறிச்சி, கோட்டவிளை ஆகிய பாலர்பள்ளிகளில் மலரஞ்சலி, பிரார்த்தனை இவற்றுடன் அன்பும், மரியாதையும் பொங்க நடத்தப்பட்டது.

சுவாமி விவேகானந்தர் சிக்காகோ சொற்பொழிவு ஆற்றிய உலக சகோதரத்துவ தினம் கேந்திரப் பாலர்பள்ளிகளில் ஊர்வலம், சிறப்புரை, பரிசளிப்பு, பெற்றோர் கூட்டம் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் இவற்றுடன் உற்சாகம் பொங்கும் வண்ணம் நடத்தப்பட்டது. தூத்துக்குடி மாவட்டம் ஷண்முகபுரம் பி. தங்கம்மாள்புரம், கூட்டாம்புளி, செக்காரக்குடி, நெல்லை மாவட்டம் சிவகிரி ஆகியவற்றில் இவ்விழா அழகுற கொண்டாடப்பட்டது. கோவில்பட்டி லாயல் மில்லில் யோகப் பயிற்சி வகுப்பும், உலக சகோதரத்துவ தினமும் இணைந்து நடத்தப்பட்டன. அனைவருக்கும் சுவாமி விவேகானந்தரின் உபதேசப் பிரசுரம் வழங்கப்பட்டது.

அருப்புக்கோட்டை காந்தி வித்யாலயத்தில் உள்ளூர் கேந்திரக் கிளை நடத்திய நகர்ப்புறப் பண்பாட்டுப் போட்டியில் ஸ்டேட் வங்கி மேலாளர் செல்லம், கேந்திரச் செயலாளர் திரு. ஐயப்பன், தலைமை ஆசிரியர் சுவாமி நாகலிங்கனார், அன்பர் ஞான சௌந்தரி, ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். 23 பள்ளிகளில் இருந்து 316 மாணவர்களும், 35 ஆசிரியர்களும், ஐந்து பெற்றோர்களும் பங்கேற்றனர். விழா ஏற்பாடு திரு. பேச்சியப்பன், மகாலிங்கம், ராஜலெக்ஷ்மி, கனகாம்பரம்.

குமரி மாவட்ட பாலர் பள்ளிகள் ஏக்நாத்ஜியின் நினைவு நாளை பக்தி சிரத்தையுடன் கொண்டாடின.

# திருநாவுக்கரசர்

## என்.எஸ்.பி

தமிழகத்தில் பக்தி வெள்ளம் பெருகிடச் சைவம் தந்த **அருள்நதி** திருநாவுக்கரசர் **திருநின்றசெம்மை** என்பது திருநாவுக்கரசரின் வாழ்க்கை மையம். அன்னை உமையின் பொற்கிண்ணப் பாலமுதின் ஞானமணம் ஞானசம்பந்தர் பாடல்களில் கமழும். சூலத்தான் அருளால் சூலை நீங்கிய சுகம் நாவுக்கரசர் பாடல்களில் ததும்பும்.

திருமுனைப் பாடி நாட்டில் திருவாமூரில் பிறந்தவர் திருநாவுக்கரசர். தந்தை புகழனார்; தாய் மாதினியார்; தமக்கை திலகவதியார். இளமைத் திருநாமம் மருள் நீக்கியார். சமணம் சார்ந்து பின் சைவம் மீண்டார். அருளிய பாடல்கள் 4-5-6 திருமுறைகளில் சிவமணம் கமழ ஆன்மீகம் பேணக் காண்கிறோம்.

நாவுக்கரசர் பாடல்களில் மூவகை அனுபவங்களின் குரல்கள் தெளிவாக ஒலிக்கக் காண்கின்றோம். 1) உலக அனுபவங்களின் வெம்மை, 2) இறையனுபவத்தின் தண்மை, 3) வெம்மையினின்று தண்மையை நாடும் பயண அனுபவம்.

மருள் நீக்கியாரின் இளமை அனுபவங்கள் கசப்பானவை; கொடுமையானவை. தந்தையின் மரணம்-தாயின் மரணம்-தமக்கைக்குப் பேசிய மணமகன் மரணம் - மரணத்துக்குத் துணிந்த தமக்கை தன் பொருட்டு வாழ முடிவெடுத்து ஏற்றுக் கொண்ட இளமைத்துறவு - என அலை அலையாய்க் கசப்புகள்!

இச்சூழலில் பெற்ற நிலையாமை உணர்வின் கலக்கத்தைச் சமணம் ஈர்த்தது. தமக்கையின் பிரார்த்தனையோ சைவத்துக்கு மீட்டது. ஆனால் சமணம் புதிய முகம் காட்டியது. வஞ்சனையால் துரத்தியது! தமிழகத்தில் வேறு எந்த ஆன்மீகரும் இத்துணை பகைவெறிக்கு இலக்காகவில்லை. நாவுக்கரசர் தாய்மதம் நீங்கிச் சமணம் சென்றபோது எந்த வன்முறையும் நிகழவில்லை திலகவதியின் பிரார்த்தனை மட்டுமே எதிர்நின்றது. ஆனால் அவர் தாய்மதம் மீண்டபோது நஞ்சூட்டலும்-யானை மிதியும்-நீற்றறையும், கல்பிணைத்துக் கடல் எறிதலும் அரசபலத்தோடு அவரெதிரே அணிவகுத்தன. இக்கசப்புகளும், வெம்மைகளும் அவர் பாடல்களுக்கு **அனுபவ முதிர்ச்சி** தந்தன. **ஆழமிகு வாழ்க்கைப் பார்வை** தந்தன. இவ்வெம்மையின் பதிவு அவர் பாடல்களில் உண்டு- அரற்றலாக அன்று; தண்மைத் தேடலாக. இத்தண்மைத் தேடலில் முகிழ்ப்பதே அவர் காணும் வாழ்க்கை மையமாகிய திருநின்ற செம்மை. இத்தண்மை - இச்செம்மை - கருதி அவர் மேற்கொள்ளும் பயணமே அவரது பாடல்களில் விரிகிறது. தலங்கள் பல காண்கிறது. அவர் பயணம். அங்கு பெறும் தரிசனங்களும், அனுபவங்களும் ஓர் அற்புத ஆன்மீகச் செழுமையை நம்முன் திறக்கிறது.

பெண்ணாடகத்தில் சூல–இடபக்குறிபெறல்–வீழிமிழலையில் பஞ்சம் போக்கும் படிக்காசு பெறல் – மறைக் காட்டில் கதவம் திறத்தல் – பழையாறையில் சமண்மறைத்த இலிங்கம் பெறல் – திங்களூரில் அப்பூதிஅடிகளின் விருந்தேற்றல் – பைஞ்ஞுலிப்பாதையில் சோறும், நீரும், வழித்துணையும் பெறல் – திருவையாற்றில் கயிலை தரிசனம் காணப் பெறல் – எனத் திருத்தல யாத்திரையில் அலைஅலையாய் அனுபவங்கள் மலர்கின்றன. தூண்டில் கிடேச்சியின் சலனம் மேலே; மீனின் கவ்வல் கீழே! இவ்வனுபவங்களால் கவ்வப்படும் அகப்பயண ஆன்ம நலங்கள் அற்புதமானவை!

'வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி; மதித்திடுமின்' என்னும் ஆழம்; 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் புரிதல்; 'நாமார்க்கும் குடியல்லோம்' என்னும் தீரம்; 'கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்' என்னும் சீற்றம்; 'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா' என்னும் பரிவு; 'குறிக்கோளில்லாது கெட்டேன்' என்னும் எச்சரிக்கை; 'கனி தந்தால் கனி உண்ணவும் வல்லிரே' என்னும் கனிவு; 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே' என்னும் குதூகலம்; 'தேடிக்கண்டு கொண்டேன்' என்னும் பெருமிதம், 'சிவன் என்னும் ஓசை அல்லா நறையோ உலகில் திருநின்ற செம்மை உளதே' என்னும் ஞானம் – எனச் சிதறும் அனைத்து வண்ணங்களும் வெம்மையினின்று தண்மைக்கு நடக்கும் பக்திப் பாதையின் அழைப்புக் குரல்களே!


திருநாவுக்கரசர்

அனுபவ முதிர்ச்சியே பரிவுடன் கைதந்து
உலக வெம்மையினின்று சிவத் தண்மைக்கு
அன்புடன் அழைத்துச் செல்லும் அற்புத
இனிமையே அப்பர் தேவாரம்.

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.'

Printed by : Shri. Pravin V. Dabholkar at M/s RNR Printers and Publishers, 8, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.

Published by : Shri. Pravin V. Dabholkar for Vivekananda Kendra Prakashan Trust, 5, Singarachari Street, Triplicane, Chennai - 600 005.

Editor : Shri. P. Parameshwaran, President, Vivekananda Kendra, Vivekanandapuram, Kanyakumari - 629 702.